திராவிடநாடு

17—4—60 | மலர் 18] | வார வெளியீடு | [இதழ் 40 | விலை 16 காசு

எக்காலம்?

—[புலவர். அரி. மதி]—

நாடு நமதென்போம்—உரிமை
நமதுயிர் என்றிடுவோம்
நாமோ பிறர்க்கடிமை—இல்லை
நாயினும் கீழினமோ?

அடிமை வாழ்வதினும்—இறப்பு
ஆனந்த மென்றிடுவோம்
அடிமை விலங்கொடிப்போம்—அதில்
அழிவதில் உளங்களிப்போம்

தனியர சாண்டவர் நாம்—பிறர்
தாளினைத் தாங்குவதோ?
ஒன்றெனக் கூடிடுவோம்—விடுதலை
வேண்டி முழக்கிடுவோம்

தெலுங்கரும் கன்னடத்தார்—மலை
யாள மாந்தர்களும்
என்றுமே ஓரினமாம்—தமிழர்
அன்புடைத் தம்பியராம்

காதலி தரும் சுகமும்—தமிழ்க்
கவிகள் தரும் சுவையும்
மழலை தரும் மகிழ்வும்—மா
மதியின் இன்பமுமே

ஒன்றெனக் கூட்டிடினும்—விடுதலை
ஒன்றிற் கிணையாமோ?
திராவிடம் கண்டிடவே—நாம்
திரளுவ தெக்காலம்?

காஞ்சீபுரம்

17—4—60.

தம்பி !

''புலிபோலப் பாய்ந்தான்! வேல் வீசினர்; தைத்தது; இழுத்தெடுத்து வீசினான் வெளியே; கொட்டும் குருதியைத் துடைத்துக்கொள்ளக்கூட இல்லை; தூரத்திக்கொண்டு வருபவர்களின் தொகை வளர்ந்துகொண்டிருந்தது; அவன் அது குறித்துக் கவலைப்பட்டானில்லை; அகன்ற வாய் முதலைகள் நிரம்பியது அகழி; அச்சமின்றி அதனைக் கடந்தான்; வழவழப்பான வகையிலே அமைத்த சுற்றுச் சுவர், பல்லி போல அதிலே ஊர்ந்து சென்றான்; கயிறுவீசி இழுத்துப் பார்த்தனர், உடும்பு போலப் பற்றிக்கொண்டான்; கல்லெறிந்தனர் கவண்கொண்டு; கலங்கவில்லை; சுற்றுச் சுவர்மீது நின்றான்; கீழே இறங்க வழியில்லை; குதித்தாகவேண்டும், குதித்தால் எலும்புகளே நொருங்கிப்போகும்,—என்றே அனைவரும் கருதினர். அவனோ இங்குமங்கும் நோக்கினான்; கீழே குதித்தான்; ஓடோடிச் சென்றான்; அந்தச் சத்தம்கேட்டு, மிரண்டு, கட்டவிழ்த்துக்கொண்டு ஓடிற்று ஒரு குதிரை; அதன்மீது தாவினான், காற்றெனப் பறந்தது; அவன் அடவிக்குள் சென்றுவிட்டான்.''

தம்பி! கேட்பதற்கே சுவையாக இருக்கிறதல்லவா? ''ஆற்றலென்றால் இவ்விதமன்றோ இருந்திடவேண்டும்! அஞ்சா நெஞ்சு இருந்தாலன்றோ இதுபோலச் செய்திட இயலும்! ஆபத்துகளைத் துச்சமென்று கருதிடுபவனையன்றோ வீர உலகம் மெச்சிப் புகழ்ந்திடும்! இத்தகு திறனுடையாரன்றோ, ஒரு நாட்டுக்குத் தேவை! அத்தகையவர் இருந்தாலன்றோ, மாற்றார் அந்த நாட்டினைக் கண்டு மருண்டிடுவர்!''-என்று பேசிடத் தோன்றும். உள்ளத்திலே ஒரு எழுச்சி ஏற்படும். கண்களிலே புது ஒளி காணப்படும்! உரையிலே உவகை ததும்பிடும்!

ஓவியம் தீட்டுவோமா, காவியம் இயற்றுவோமா, கவிதை பாடுவோமா, காட்சியாக்கிக் காட்டிடுவோமா, என்றெல்லாம் விருப்பம் எழும்.

''இதுபோலத்தான்'' என்று துவக்கி, மாவீரர் காதை, மண்டலம் வென்ற தீரர் வரலாறு, மாற்றாரைக் கண்டதுண்டமாக்கிய ஆற்றல் மிக்கவன் பற்றிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூறிடப் பலர் முன்வருவர்.

நமக்கு இல்லையே அந்த ஆற்றல்?—என்று சோகித்துக்கொள்வர் சிலர். அவன் என் ஆருயிர்த் தோழன், என்று சொந்தம் கொண்டாடிக்கொள்வர் மற்றும் சிலர். ''அவன் இயற்கையிலே அத்துணை ஆற்றல் படைத்தவன் அல்ல, சூழ்நிலை அவனை அவ்விதம் ஆக்கிவிட்டது'' என்று விளக்கம் கூறுவர் இன்னும் சிலர். பல்வேறு முறையாகப் பேசிக்கொண்டாலும், ஊடே; மணிகளைச் சேர்த்திடும் இழை போல, மகிழ்ச்சி, பெருமை எனும் உணர்ச்சி காணப்படும், அல்லவா?

''இது என்ன அண்ணா! கேள்வி! வீரச்செயல் குறித்துக் கேள்விப்பட்டால், எவர் உள்ளத்திலும் மகிழ்ச்சியும் எழுச்சியும் ஏற்படத்தானே செய்யும் இயல்பாகவே

முள்ளு முனையிலே....

இதைக் கேட்டுத்தானா தெரிந்துகொள்ளவேண்டும்!"—என்று கூறுகிறாய். புரிகிறது, ஆனால் தம்பி! மேலும் கூறுகிறேன், கேள்.

கேட்போர் மனதிலே எழுச்சி ஊட்டத்தக்க விதமான வீரச்செயல் புரிந்திடுபவனை, எவரும் மெச்சிடுவர்—மெச்சிப் பேசுவது தவறுமல்ல-தேவையுங்கூட.

ஓங்கி வளர்ந்த தென்னை—ஒய்யாரமாக நின்றிடும் தென்னை! நிலவொளி, கீற்றிலே படும்போது ஓர் தகத்த காயம் தெரியும். அப்படிப்பட்ட தென்னை தரும் பானம் இது—என்று, தம்பி! இளநீரையும் கூறலாம், கள்ளையும் கூறலாமல்லவா!! இரண்டிலே, எது விரும்பத்தக்கது என்பதற்கு விளக்கமா வேண்டும்! இரண்டும், ஒரே தென்னை தருவதுதான் எனினும், கள்ளை வெறுத்திடத்தானே வேண்டும். கள், கூடத் தம்பி, தொழிலறிந்தோர் கூறுகின்றனர், பாளை சீவிப் பானையில் துளிகளைத் தேக்கினால் உடனே அது கள்ளாகிவிடுவதில்லை; இனிப்புச்சாறாக மட்டுமே இருக்குமாம்; வேறோர் முறையின் மூலமாகவே இனிப்புச் சாறு, மனிதனை மிருகமாக்கிடத்தக்க போதை தரும் கள் ஆக்கப்படுகிறது.

தென்னை தருவதுதானே என்பதால், கள், விரும்பத்தக்கது ஆகிவிடாது. அதுபோலவேதான், தம்பி! செயல், வீரதீரமிக்கது என்பதால் மட்டுமே, பாராட்டப்படத்தக்கது, போற்றப்படத்தக்கது என்று கூறிவிடமுடியாது.

நான், காட்டினேனே, கல்லெறிக்கும் வேல் வீச்சுக்கும் அஞ்சாது, எதிர்ப்புக்கண்டு கலங்காது, அகழி கடந்து, சுற்றுச் சுவரைத்தாண்டி, ஓடினவன்—அவன் போற்றத்தக்கவனா அல்லவா என்பது, அவன் காட்டிய திறமைகளை மட்டும் கவனித்தால், விளங்கிவிடாது—ஆற்றல் மிக்கோனாக, எதிர்ப்பட்டோரை வீழ்த்துவோனாக, எந்த இடர்ப்பாட்டையும் கண்டு கலங்காதவனாகத் தெரிகிறானே, அவன், யார்? எந்தக் காரணத்துக்காக அவன் அதுபோல நடந்துகொண்டான்? விளைவு என்ன? என்பதைப் பொறுத்துத்தான், போற்றத்தக்கவனா அல்லவா என்பதுபற்றி முடிவுசெய்ய இயலும். அதுதான் முறை.

செங்கிஸ்கான், தைமூர் போன்றோர்கள், அழித்த நகரங்கள் ஏராளம்! கொன்று குவித்த மக்கட் தொகை மிக மிகுதி! பெருங்காற்றுக் கிளம்பினால் அழிந்திடும் பூங்காபோல, பெருநெருப்புப் பிடித்துக் கொண்டால் சாம்பலாகும் எழிலூர்போல, செங்கிஸ்கான், தைமூர் போன்ற கொடியவர்களின் கோபப் பார்வைபட்டதால் மட்டுமே, பாழாகிப்போயின பேரூர்கள், சிற்றூர்கள்; எனினும், அவர்களை, வீரத்தின் சின்னமென, விருதுபெறத்தக்கோரென, அறிவாளர் கூறார். இயற்கை சில வேளைகளில் கக்கிடும் கொடுமைகள் போன்ற கொடுமைகள் இவை, என்றே கூறுவர்.

ஆயினும், தம்பி! போர் முறைகளிலே, அவ்விருவரும் வல்லவர்கள்! புது முறைகளைக்கூடக் கண்டவர்கள்! மிகப்பெருங் கூட்டத்தைச், சிறுபடை கொண்டு, சின்னாபின்னமாக்குவதிலே சமர்த்தர்கள்! பீதி கிளப்பியே அரசுகள் பலவற்றை அழித்தொழித்தவர்கள். "நட!" என்று அவர்கள் கட்டளையிட்டதும், ஏன் என்று கேட்கவோ, எவ்வழி? என்று விசாரிக்கவோகூட முடியாத நிலையில், படையினர் பாய்வர்! "விழு!" என்று உத்தரவு பிறந்தால், எதிரே தெரிவது கரை புரண்டோடும் பெருவெள்ளமெனினும், கதியாது? என்று எண்ணிடாமல், வீழ்வர்! "வெட்டிவா தலைகளை"—குருதி சொட்டச் சொட்ட, தலைகளைக் கொண்டுவந்து, தாளின்கீழ் கொட்டுவர்!!

ஆக, படை அமைத்திட, படையினரிடம் அதிகாரத்தைப் புகுத்திட, முறை வகுத்திட, திறன் இருந்தது அவ்விருவரிடமும். எனினும், போர்முறை பலவற்றைக் கண்டறிந்து அளித்த ஆசான்களாக அவர்களை, அவனியில் எவரும் ஏற்றுக்கொண்டாரில்லை.

எனவே, வீரதீரம், அறிவாற்றல், திறமை எனும் எதனையும், பெற்றவர் எவர் என்பதைப் பொறுத்தும்; பெற்றதனால் விளைந்தன யாவை என்பதைப் பொறுத்தும்தான், மதிப்பிட வேண்டுமேயல்லாமல், ஆஹாஹா! வீரதீரம் இருந்தவாறென்னே! அறிவாற்றலை என்னென்பது! திறமை இஃதன்றோ! என்று, விளைவு அறியாது, பாராட்டிடக்கூடாது. ஆனால், கேட்டவுடன், பாராட்டலாம் போலத் தோன்றும். துவக்கத்திலே நான், காட்டினேனே, மயிர்க்கூச்செறியத் தக்கவிதமான வீரச் செயலாற்றியவனை; அவன் போன்றோரின் 'காதை'யைக் கேட்டதும், பாராட்டிடத்தானே தோன்றும்.

புரவிமீதமர்ந்து அடவி சென்றானே, ஆற்றல் மிக்கோன்—அவனைக் காண்போம், தம்பி! கருத்துத் துலங்கிட.

வேகமாக வருகிறது குதிரை! வேலேந்திகள் விரண்டோடுகின்றனர்! விழியில் வழியும் கண்ணீரைத் துடைக்கவும் இயலாத நிலை! தலைவிரி கோலம்! கரங்களில் விலங்கு! இந்நிலையில் உள்ளாள் மூதாட்டி. காவல் புரியவந்த வீரர்கள் ஓடுவதையும், கடுகி வரும் குதிரை வீரனையும் காண்கிறாள்; கண்ணீரால், பார்வை சிறிதளவு தெளிவற்று இருக்கிறது! உற்றுப் பார்க்கிறாள், முகம் மலருகிறது, மகனே! என் அருமை மகனே! என்று கூவுகிறாள்.

"அம்மா! அம்மா! என்னை ஈன்றவளே! என்னை ஆளாக்கிவிட்ட அன்னையே!" என்று, குதிரை வீரன் கதறுகிறான்; காலடி வீழ்கிறான்; கண்ணீரால் அவள் காலடியைக் கழுவுகிறான்.

அவன் முகத்தைத் தன் இரு கரங்களில் வைத்துக்கொண்டு, தாய் பெருமிதம் கொள்கிறாள்.

"இந்த இன்பம் கிடைக்குமென்று, நான் துளியும் எண்ணினேனில்லையடா, மகனே! கடைசி முறையாக ஒருகணம், என் கண்குளிர உன்னைக் காண வேண்டும், அப்போதுதான், நிம்மதியாகச் சாகமுடியும் என்று நினைத்தேன். என்னையோ கொலைக்களம் இழுத்துச் செல்கிறார்கள். உன்னையோ, சிறையிலே வைத்துப் பூட்டிவிட்டார்கள், உன்னை எப்படி, இந்தப் பாவி காணமுடியும்!—எனக்குக் கிடைக்காது அந்த வாய்ப்பு!—என்று எண்ணினேன்—ஏக்கம் தாக்கிற்று. ஆனால், மகனே! இதோ இணையில்லா இன்பம்! நான் பெற்றெடுத்த செல்வத்தைக் கண்குளிரக் காணும் இன்பம்! இனி, என்ன, மகனே! கொடியவர்கள் கொன்று போடட்டும், கழுகுக்கு இரையாக்கட்டும், கனலோ புனலோ, கடுவிஷமோ கட்டாரியோ, தூக்குக் கயிறோ சித்திரவதையோ, எம்முறை அவர்களுக்கு விருப்பமோ அம்முறையில், என்னை அழிக்கட்டும், கவலையில்லை! உன்னைக் கண்டேன். அந்தக் களிப்பு என் இதயத்தில் பொங்கி வழிந்துகொண்

டிருக்கும் நிலையில், மரணம் எனக்கு வேதனை தாராது.''

அவ்விதம் அகங் குழைந்து பேசிய அன்னையின் தாளை வணங்கி, அந்த மாவீரன், "என்ன வார்த்தை யம்மா சொன்னீர்கள்! என் உடலிலே உயிரும், கரத்திலே வாளும் உள்ளவரையில், படையே வரினும், தொடவிடுவேனா தங்களை! என்னைப் பிணமாக்கியபிறகல்லவா, கொடியவர்கள் உன்னிடம் நெருங்கமுடியும். சிறைக்கம்பிகளைப் பெயர்த்துவிட்டு, சீறும் புலிகளை விரட்டிவிட்டு, நான் ஓடோடிவந்தது, "போய் வா, தாயே! கொலைக்களத்துக்கு!" என்று கூறி, வழி அனுப்பவா! அன்னையே! வீரதீரமும், தியாகமும் கலந்தல்லவா, பாலூட்டி வளர்த்தீர்கள்!'' என்று கேட்கிறான்.

அடவியிலே, இதுபோன்ற காட்சி கண்டிடின், தம்பி! அவன், வீரர்கோட்டத்துக்கு ஏற்றவன்! வழிபடத்தக்கவன், என்று கூறலாம்; கூறிட எவரும் தயங்கார்.

அந்தவிதமான காட்சியாக இல்லாமல், அடவியில் ஓர்குகை; அதன் அருகேசென்று, அவன், உள்ளே நுழைகிறான் என்று வைத்துக்கொள், தம்பி! அவனைக் கண்டதும், அலறித் துடித்தபடி, ஒரு அபலை நிற்கிறாள். அவன் 'இடி இடி'யெனச் சிரிக்கிறான். அவள் உடல் படபடவெனத் துடிக்கிறது.

"சிறையில் தள்ளிவிட்டோம்—செத்தொழிவான், அல்லது நடைப்பிணமாகிவிடுவான்—என்று எண்ணிக்கொண்டாயல்லவா? இதோ பார்! நன்றாகப்பார்! உற்றுப்பார்! கண்களில் பழுது இல்லை அல்லவா! பார்! நான்தான்! ஆமாம்! பிடித்திழுத்துச் செல்லுங்கள் பேயனை, என்று கூறி, நான் பிடிபட்டது கண்டு, பெருமிதம் கொண்டாயே, அதே ஆள்தான், நன்றாகப் பார்த்துக்கொள். உன் கண்ணீரைக் கண்டும், கூக்குரலைக் கேட்டும், என்மீது பாய்ந்தனர், பலர்! தாக்கினர் ஈட்டியால், வாளால், வேலால்! பிடிபட்ட புலியைக் கூண்டிலடைத்த பிறகு, மாடோட்டும் சிறுவன்கூடக் கோல்கொண்டு குத்திக், குறும்பு செய்து, சிரிக்கிறான்! என்னைப்பிடித்தவர்களோ, களம்பல கண்டவர்கள்! அரச ஆணையால் வலிவுபெற்றவர்கள். சிறையில் தள்ளினர்! கருங்கற் சுவர்கள்தான், காரிகையே, கருங்கற்சுவர்! இரும்புக் கம்பிகள்! எப்புறம் திரும்பினாலும் காவலர்கள்! இரவுபகல், எந்த நேரத்திலும் கட்டுக்காவல்! அவர்கள் என்னைப் பூட்டிவைத்தது, அத்தகைய சிறையில்தான்! விடுதலை தந்துவிடவில்லை! என் வல்லமையால், வெளியேறினேன். தடுத்தனர், தாக்கினேன்! தாக்கினர், தப்பினேன்! துரத்தினர், பிடிபடவில்லை! வேல் எறிந்தனர், எடுத்தேன், ஒடித்தேன், இதோ இங்கு நிற்கிறேன்! நன்றாகப்பார்! நானேதான்!'' என்று அவன் பேசுகிறான், அந்த மாது மிரளுகிறாள்.

காட்சி இதுபோல் எனின், என்ன தோன்றும் உனக்கு; அவனைப்பற்றிக் கூறிட.

அவன் ஆற்றலையும் அஞ்சாநெஞ்சத்தையும், பாராட்டவேண்டும்போல் தோன்றுகிறது.

அவன், அந்த மாதிடம் பேசுகிறான்—அவளோ திகைக்கிறாள்.

அவளிடம் அவன் பேசுவதிலிருந்து, அவனைப் பிடிபட வைத்தது, அந்த மாதுதான் என்பதும், சிறையிலிருந்து தப்பி ஓடிவந்தவன், அவளிடம் வந்து நின்று மிரட்டுகிறான் என்பதும், அவனால் அதுபோது, அவளை என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும் என்பதும், தெரிகிறது. இந்த நிலையில், அவனைப்பற்றி என்ன எண்ணத் தோன்றுகிறது, உனக்கு, உடனே, கூறிவிடாதே, தம்பி, அவ்வளவு எளிதல்ல!

"பிடிபட்டேன்—என் வல்லமையால், விடுபட்டேன்'' என்கிறான். பாராட்டத்தக்க ஆற்றல் இருக்கிறது இவனிடம் என்பது தெரிகிறது. அந்த வகையில், அளவில், அவன் பாராட்டப்பட வேண்டியவன்.

சிறையிலிருந்து தப்பி வந்தவன், கொலைக்களம் இழுத்துச் செல்லப்படும், தாயைக் கண்டு, அவளைக் காப்பாற்றத் தன்னையே அர்ப்பணிக்க உறுதி கொண்டதாகக் கூறுவது போன்றது, காட்சியாக இருந்திடின், அவன் பெருவீரன் என்று பெருமிதத்துடன் கூறலாம்; அவன் மிதித்த மண் மணம் பெறும் என்று கவிதை பாடலாம்.

அவன் காண்பது கொலைக்களம் கொண்டு செல்லப்படும் தாய் அல்ல, குகையிலே இருக்கும் ஒரு மாது; அவன் பேசுவது மகன் என்ற பாசத்தால் அல்ல, பிடித்துக் கொடுத்தவள் இவள் அல்லவா என்ற கோபத்தோடு பேசுகிறான் என்பது தெரிகிற போது, அவனைப்பற்றி என்ன கூறப்போகிறாய்! அவன் வீர தீரத்தை, ஆற்றலை அஞ்சாமையைப் பாராட்டப் போகிறாயா?

காடு! குகை! அங்கு ஓர் அபலை! அவளிடம் அச்சமூட்டும் முறையில் பேசுபவனைப் பாராட்ட முடியுமா! அவன் ஆயிரத்தெட்டு அகழிகளைத் தாண்டினவனாக இருக்கட்டும்! நூற்றெட்டுக் கருங்கற் சுவர்களைத் தாண்டிக் குதித்தவனாக இருக்கட்டும்! எதிர்ப்பட்டோரைக் கொன்று குவித்தவனாக இருக்கட்டும்! இருந்தாலும், அவன், ஓர் மாதிடம், உருட்டி மிரட்டிப் பேசுவது கண்ட பிறகு, அவனை வீரனென்று கூற முடியும்? கொடியவன் என்றல்லவா, கண்டிக்கவேண்டும்! சிறை கடந்தவன் என்று பாராட்டமுடியும், ஏய்த்துவிட்டு ஓடிவந்த கைதி அல்லவோ அவன்!—என்று கூறுவாய்—கூறத் தோன்றும்; ஆனால் அவசரப்பட்டு அவ்விதமும் கூறிவிடாதே. முழு உண்மை, உனக்குத் தெரிந்துவிட்டதா? குகை தெரிகிறது, மாது காண்கிறாய், அவளிடம் மருட்டிப் பேசுபவனைக் காண்கிறாய். அது போதுமா, உண்மையை உணர்த்த? போதாது!

உண்மை முழுவதும் தெரியவேண்டுமானால், "என்னைப் பிடித்துக் கொடுத்தாய் — சிறையில் அடைத்தனர்—இதோ நான் தப்பி ஓடி வந்திருக்கிறேன்'' என்று பேசுபவனையும், அவன் பேச்சுக் கேட்டுக் குகையிலே நின்றிருக்கும் மாதையும், பார்த்தால் மட்டும் போதாது; அவர்கள் யார்? என்பது தெரிந்தால்தான், உண்மை துலங்கும்.

"ஏழை எளியோரை வாட்டி வதைக்கிறான் மன்னன்! அவன் அருகிருந்து, அறம் அழிக்கின்றனர், அவனால் அமைச்சர் ஆக்கப்பட்டிருக்கும் ஆள் விழுங்கிகள்! இந்த அக்கிரம அரசு இருக்கும் வரையில், விளைவது உழுபவனுக்குக் கிடைக்காது, வீணர் கொழுப்பர்; விவரமறியாதார் விவேகிகள் என்ற விருது பெறுவர், நாடு நாசமாகும், நல்லோர் மறைவர், என்பதை உணர்ந்தேன். இந்த அரசை அழித்திடத்

(13-ம் பக்கம் பார்க்க)

ஓரங்கநாடகம்:

ஜோன் ஆப் ஆர்க்

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஜோன்:- இல்லை, என் மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே, இல்லவேயில்லை! நீதிபதியாக இருப்பவரும், என் மேல் குற்றம் சாட்டுபவரும் மதகுருமார்களாக இருக்கும்போது நான் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும். இந்த மன்றத்தை நான் எப்படி நீதிமன்றமாகக் கொள்ளமுடியும்?

நீதிபதி:- நீ அதிகமாகப் பேசுகிறாய் ஜோன்!

ஜோன்:- ...உண்மைதான், நீதிபதி அவர்களே, நான் அதிகமாகத்தான் பேசுகிறேன்!... (கிண்டலாக) அறு...ப...து... குற்றங்களுக்குப்பதில் பகரவேண்டாமா?

மதகுரு:- அடுத்த குற்றம்!...ஆண்டவனின் அடிவாரிசாக, நாங்கள் பூவுலகில் இருக்கும்போது, அந்த ஆண்டவன் உன்னிடத்தில் வந்து, களத்துக்குப் போ, காவலனுக்கு முடிசூட்டு' என்று சொன்னான் என்று நீ சொல்வது, எங்களையும் எங்களது புனித கடவுட் பற்றையும் நிந்திப்பதாகும். இது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம்! மகத்தான மதத் துரோகம்!!

ஜோன்:- (அலட்சியமாகச் சிரித்து) மணி, முத்து, மலர், மாமிசம் இவற்றை நிறுக்கத்தான் துலாக்கோல் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!...... ஆண்டவன் மேல் நீங்கள் செலுத்தும் பக்தி அதிகமுடையா, அகலமா, நீளமா, அல்லது நான் காட்டும் பக்தியா என்று கண்டுபிடிக்க துலாக்கோல் இங்கே யாரிடமிருக்கிறது?

(கூட்டத்தினர் சிரிக்கிறார்கள்.)

ஜோன்:- அப்படியே துலாக்கோல் இருந்தாலும், அதைப் பயன்படுத்தும் உரிமை ஆண்டவனுக்குத்தான் உண்டே ஒழிய, உங்களுக்கில்லை, ஆண்டவன் வழி நடக்காத உங்களுக்கில்லை! ஆனாலும், மனதத்துவ ரீதியாகக் கூறுகிறேன், கேளுங்களேன், கடவுள் என்னோடு பேசினார் என்ற வதந்தி வலம் வந்த காரணத்தை!......அன்றொரு நாள் மாலை, குன்றுக்கருகில் குந்தியிருந்தேன், நான்! கன்று போன்றோர் எந்நாட்டு மக்கள், அவர்களைக் கொன்று குவிக்கிறாரே, ஆங்கிலர் என்றெல்லாம் நான் எண்ணி நொந்தேன்.

அ. விசுவநாதன்

என் நாட்டு நிலை குறித்து வருந்தி நின்றேன். என் நாடு தனைக்காக்கத் தகுந்த வழி ஒன்றில்லையா என்று வாய்விட்டுக் கூறி, வகையறியாது தனித்திருந்தேன். எனக்குள் நான் சொன்னதனைக் கேட்டு, என் தோழி ஓரிருவர், ஓடிவந்தார், என்னருகே. யாரோடு பேசினாய், போராடுவேன் என்றாயே, என்றவர்கள் கேட்க, யாரோடும் இல்லை, நீர் ஓடிவிளையாடும், என் நாட்டு நிலைமை, எனக்கிருக்கும் கவலை என்று நான் உரைத்தேன். கேட்டனரோ, தோழிகள்? கலைந்தனரோ, எனைவிட்டு? இல்லை, இல்லை! என்னை விட்டனர், இல்லை!......"கடவுளோடா, பேசினாய்?'' என்றனர். கன்னங்குழையச் சிரித்தேன். நகைச்சுவையாக நான் தலையாட்டி: 'ஆமாம்,' என்றேன், அவர்கள் வியந்தனர்!- "இன்னும் என்ன சொன்னார், கடவுள்'' என்று அவர்கள் என்னைக் கேட்க, "சொன்னார், என்னைச்செருகளம் செல்லச் சொன்னார், சார்லசுக்கு முடிசூட்டச் சொன்னார், எந்தன் நாடு காக்க என்று நான் கூறிவிட்டேன். தோழியர் ஓடினர், ஊருக்குள்ளே! ஊரினர் கூடினர், என்னைச் சுற்றி. கடவுள் பேசிய கன்னி என்றார், கலங்கி நான் நின்றேன், கவலைகொண்டு! விளையாட்டு வினையாயிற்றே என்ற நினைவை உண்டு!

மதகுரு:- (மகிழ்ச்சியால் குதித்து) ஆஹா...ஹா...... ஜோன்! உன் கதையை நிறுத்து, போதும்!... மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!.........இந்த இடத்தை நீங்கள் சற்றுக் கூர்ந்து, கவனிக்க வேண்டும். நம்முடைய குற்றச்சாட்டு, ஜோன் கடவுளிடம் பேசியதாகப் பொய் கூறி, நம்மையெல்லாம் நிந்தித்தாள் என்பதாகும். இதோ, இந்தக் கதையின் மூலம், ஜோன், தான் கடவுளிடம் பேசவில்லை- என்றும் "போருக்குப் போ'' என்று அவர் கட்டளையிடவில்லை என்றும் ஒப்புக்கொள்கிறாள்......... நான் இவள்மேல் சாட்டிய அறுபது குற்றங்களில், ஐம்பத்தொன்பதைத் தள்ளிவிடுவோம்!.........இந்த ஒரு குற்றத்திற்காகவே, இவளுக்கு என்னென்னவோ தண்டனைகள் கொடுக்கலாமே!

நீதிபதி:- தெள்ளத் தெளிந்த இந்த ஒரு குற்றத்தையாவது, ஒப்புக்கொள்கிறாயா, ஜோன்?

ஜோன்:- ......குற்றம்......ஒப்புக் கொள்ளுதல்!......இது, இரண்டும் என் அகராதியிலேயே கிடையாது!...... மனத் தத்துவமாவது உங்களுக்குப் புரியும் என்று ஒரு தத்துவத்தைச் சொன்னேன்! உங்களுக்கு மத தத்துவம்தான் புரியும் போலிருக்கிறது!.........ஏன், அது ஒன்றுதான் புரியும் போலிருக்கிறது!.........

மதகுரு:- (தலையைப் பிடித்துக் கொண்டு) ஐயோ, என் தலை சுற்றுகிறது! குற்றவாளி வழக்கைக் குழப்புகிறாள், சுற்றுகிறாள், வளைக்கிறாள்! (ஜோனிடம் ஓடிச் சென்று, ஆத்திரத்தோடு).........நேராகப் பதில் சொல்!......... நீ கடவுளிடம் பேசினாயா? கடவுள் உன்னோடு பேசினாரா?

ஜோன்:- (ஆத்திரத்தோடு) ஆம்! கடவுளிடம் நான் பேசினேன்! கடவுள் என்னிடம் பேசினார்!... இது வரையில் பெருங்கடல் போன்ற பொறுமையோடு இருந்து, உங்களுடைய பொருளற்ற வினாக்களுக்கும், அறிவோடு விடை கொடுத்து வந்தேன்!.........இனி, நீங்கள் என்ன சொன்னாலும், அதற்கு மாறான கருத்தையே நான் வலியுறுத்தப் போகிறேன்!......... எங்கே, என்னைக் குற்றம் சாட்டும் மதகுருவே! என்னைப் 'பெண்' என்று சொல், 'நான் இல்லை! நான் ஆண்' என்று மறுக்கிறேன்!......... இதைப் போல் ஒரு அபலைப் பெண்ணை அக்கிரமத்திற்குள் ஆட்படுத்துவது உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லை?

நீதிபதி:- ஜோன், உன் வாய் வரம்பு மீறுகிறது!

ஜோன்:- ஆமாம், என் மதிப்பிற்குரிய நீதிபதியவர்களே! உங்கள் அநீதியும் வரம்பு மீறுகிறது!

மதகுரு:- ....அடுத்த குற்றச்சாட்டு! நீ ஒரு மாயக்காரி!...... பேய், பிசாசுகளிடம் தொடர்பு கொண்ட சூனியக்காரி!

ஜோன்:- பேய், பிசாசுகள், அவைகளை நம்புகிறவர்களின் மனம்தான் என்று அறிவு கூறுகிறதே, அதை நீங்கள் நம்பமாட்டீர்களா?... அதை ஏன் நீங்கள் நம்புகிறீர்கள்?... அந்த நம்பினால் உங்களுக்குப் பிழைப்பேது? ......

மதகுரு:- (துடித்து) மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே, பார்த்தீர்களா... பார்த்தீர்களா... குற்றவாளி மதத்தை நிந்திக்கிறாள், மதகுருக்களைக் கேலிசெய்கிறாள்! எங்களைக் கேலி செய்வது கடவுளைக் கேலி செய்வதுபோல இல்லையா, மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே?

நீதிபதி:- உண்மை! உண்மை! மதகுருவை நிந்தித்தல், ஆண்டவனை நிந்திப்பதைவிட மகா பாவம்!... ஆகையினால், ஜோன் யோசித்துப் பேசு!... அடுத்த குற்றச்சாட்டு?

மதகுரு:- ஆண்களால் மட்டுமே காட்டமுடிந்த போர்த் திறத்தை, இந்த அற்பப் பெண் களத்தில் காட்டினாள் என்றால், அதற்கு என்ன பொருள்?... சூனியக்காரி என்பதுதானே...

ஜோன்:- (இடைமறித்து) பேரறிவு மிக்க பொதுமக்களே! இங்கு குழுமியிருக்கும் இளகிய உள்ளம் படைத்தோரே!... என்மேல் குற்றம் சாட்டுபவர் ஒரு மதகுரு. நீதிபதி இருக்கையில் இருப்பவரும் ஒரு மதகுரு. குற்றச்சாட்டுக்குப் பதில் அவர்களுக்கு நான் அளிக்க இருக்க, உங்களை விளிக்கக் காரணம் இருக்கிறது! ...சூனியச் சக்தியால்தான் நான் சமர்க்களத்தில் வென்றேன் என்ற இக்குற்றச்சாட்டை இந்த மதகுரு மட்டும் என் மேல் சாட்டுவதாக நான் எண்ணவில்லை. நீங்கள் எல்லோருமே, பொதுமக்கள் எல்லோருமே இந்த மதகுரு உருவில் என்னைக் குற்றம் சாட்டுவதாக நான் கொள்கிறேன்!..:... ஏனெனில் நீங்களும்தானே முன்னம்... ஏன் இப்போதும் நான் பேய் பிசாசுகளின் தொடர்புகொண்டுதான் போர்க்களத்தில் வெற்றிகண்டேன் என்று கூறுகிறீர்கள்! அதற்காக நான் உங்களைக் குறைகூறவில்லை?... நீங்களும்தான் அறிவுக் கனலை வளர்க்கிறீர்கள்!... அந்தக் கனல் வளர்ந்தால், எங்கே ஏய்க்கும் வேஷம் எரிந்துவிடுமோ என்று, ஒரு சிலர் அறியாமைத் தண்ணீரை ஊற்றி அதை அணைக்கிறார்கள்! ...நீங்கள் என்ன செய்வீர்கள்! பாவம், ஓடும் நீரோடு ஓடுகிறீர்கள்!... இந்த மதக்குருக்கள் நம்பாவிட்டால் போகட்டும். நீங்கள் நம்புங்கள்!... மனிதன்— ஆமாம், உங்களைப் போன்றே பிறந்து, வாழும் சாதாரண மனிதனால் செயற்கரிய செய்யமுடியும்; கூடும்; ஆழ்கடலையும் அடக்கும் வீரனாக முடியும்!...அப்படித்தான் நானும் — சாமானியள், பெண், பேதை, முயற்சியால், உள்ள உறுதியால், மனத்திண்மையால் செயற்கரிய செய்தேன், ஆங்கிலேயர்களைப் பேடிகளாக்கினேன், போர் பல கண்டேன், வெற்றிவாகை சூடினேன்... இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள்தான், என் மேல் குற்றம் கூறுகிறார்கள், நான் மாயக்காரியாம், சூனியக்காரியாம், பேய் பிசாசுகளின் உதவியால்தான் போர்களில் வெற்றி கண்டேனாம்...... ஐயோ, கடவுளே! நான் குற்றமற்றவள், சிறு குற்றமும் செய்யாதவள்...

நீதிபதி:- குற்றமற்றவள் என்று நீ கூறுகிறாய்! நாங்கள் துணியவில்லையே, அப்படி!......ம்...... அம்மா, ஜோன், உன் உயிருக்கு நீயே கூற்றுவனாக இராதே. உன் குற்றங்களை ஒத்துக் கொண்டு இந்தக்கழிவிரக்கக் கடிதத்தில் கையெழுத்து இடு. உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன்!

ஜோன்:- நடவாத செயல், நான் மடிந்தாலும்...!

மதகுரு:- எண்ணிப் பார்! ஜோன், மீண்டும், எண்ணிப் பார்!... சூனியக்காரர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?

நீதிபதி:- தீயிலிட்டுப் பொசுக்குவார்கள்!

ஜோன்:- ஆ!

மதகுரு:- ஆமாம், அதோ பார், எட்டடித் திடலிலே ஈரெட்டடிக் கம்பம் நடுகிறார்கள்! பட்டால் தீ சட்டென்று எரிய சுற்றிக் கொட்டுகிறார்கள் விறகை! கம்பத்தில் நீ கட்டப்பட்டவுடன், காத்து நிற்கிறான், அதோ அவன், தீ வைக்க!......ஆமாம், தீய உனக்கு தூய தீவைக்க!... அதோ, பார், தீப்பந்தம் கொழுந்துவிட்டு எரிகிறது, உன் துரோகம் கண்டு எரியும் மதத்தின் வயிற்றைப்போல!...

அதில் நீயுமா எரியவேண்டும்? உன் அழகுத் திருமேனியை, அழிக்கும் தீ நாக்குகள் தீண்டத்தான்வேண்டுமா? வன்சமர்க்களத்திலே, வாளெடுத்துப் போர்புரிந்த, உன் மலர்க்கைகள் மரம்போல் நெருப்பில் எரியத்தான்வேண்டுமா, சொல் ஜோன் சொல்!

[ஜோனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த பிரெஞ்சுக் குடிமகன் ஒருவர், அவளது காதுக்கருகில் குனிந்து ஏதோ சொல்கிறார்.]

பிரெஞ்சுக் குடிமகன்:- (மெல்ல ஜோனிடம்) அம்மா, ஜோன், நீ சற்று நேரத்திற்குமுன், நீதிபதி, உன் குற்றமற்ற தன்மையை உணர்ந்து உன்னை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிக்கவில்லை என்றும், யாராவது ஒருவர் இந்தக் கூட்டத்தில் உன் குற்றமற்ற தன்மையை உணர்ந்து, உனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கமாட்டார்களா, என்றுதான், போராடுகிறேன், என்று சொன்னுயே, அந்த ஒருவன், இதோ நான் இருக்கிறேன், அம்மா!...உனக்கு எதிரே நான், சொட்டுக்கண்ணீர்தான் வடிக்கிறேன், ஆனல், கூட்டத்தில் ஒருவனுக நின்றுகொண்டு, நான் உனக்காகக் கொட்டிய கண்ணீர்த் துளிகளுக்கு அளவேது?......இன்று நான் மட்டும் உனக்காக இரங்கிவிடுகின்ற கண்ணீர்த்துளிகள், இன்னும் சிறிதுகாலம் சென்ருல், உன் குற்றமற்ற தன்மையை உணரப்போகும் ஆயிரமாயிரம் மக்களின் கண்களிலிருந்து கடலெனப் பெருகி, உன்மேல் பூசப்பட்டிருக்கின்ற மாசை மாய்க்கும், அம்மா! உன் துன்பத்தைத் துடைக்கும், அம்மா!......ஆனல்......(கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) நீ குற்றத்தை மறுத்து, மன்னிப்புக் கேளாமல், தீர்ப்புப்பெற்று, தண்டனையாகத் தீப்புகுந்தால் யாருக்கு என்ன நன்மை?...... ஆகையால் இப்போது நீ, குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டு, விடுதலைபெற்றுவிடு......பிறகு நாம், நமது குற்றமற்ற தன்மையைக் குவலயம் அறியச் செய்துவிடலாம்...ம்... நாட்டுக்கு மீண்டும் பயன்படவும், தன் நிரபராதித் தன்மையை நிரூபிக்கவும், தன் மனச்சான்றுக்கு மாருக மன்னிப்புக்கேட்டு விடுதலை பெற்ற அறிஞர்கள் இரண்டொருவர் வரலாற்று ஏட்டிலே உனக்கு முன்னேடியாக இருக்கிருர்கள், அம்மா!...கேள் .....மன்னிப்பு......யோசிக்காதே! உன் வீரம் நாட்டிற்குத் தேவை! அது எரிந்துவிடக்கூடாது! மடைமையை எரிக்கவேண்டும்! நான் சொல்வது சரிதானே?

ஜோன்:- (பிரெஞ்சுப் பெரியவரிடம்) நாய் உண்ண இருக்கின்ற என் உடலை, இந்த நெருப்பு உண்ணட்டும். அதற்காக நான் அச்சப்படவில்லை...... ஆனலும் நீங்கள் சொல்வதிலும் உண்மையிருக்கிறது...ஆகையினல் (மன்றத்தை நோக்கி) குற்றங்களை நான் ஒத்துக்கொள்கிறேன், என்னை மன்னித்துவிடுங்கள்!

[கூட்டத்தில் சலசலப்பு. மதகுருவின் முகத்தில் சிரிப்பு. நீதிபதிக்கோ களிப்பு)

பிரெஞ்சுக் குடிமகன்:- (மகிழ்ந்து) ஜோன், என் உரைக்கு நீ மதிப்பளித்ததற்காக நான் உன்னை வணங்குகிறேன்!

[காவலாள் ஒருவன் மன்னிப்புக்கடிதத்தை ஜோனிடம் நீட்டுகிருன். ஜோன் கையெழுத்திடுகிருள்.)

நீதிபதி:- ......ஜோன் குற்றங்களை உங்கள் முன்னுலேயே ஒத்துக்கொண்டாள். அவளைத் தீயிலிட்டுப் பொசுக்கும் மரண தண்டனையிலிருந்து விடுதலைசெய்து, ஆயுள்தண்டனை விதிக்கிறேன் ...பரமண்டத்தில் இருக்கும் பிதா அவளையும் மன்னிக்கட்டும்!

ஜோன்:- (சீறி எழுந்து) என்ன' ஆயுள் தண்டனையா?...நீதிபதி அவர்களே, எனக்கு நீதியா வழங்கி இருக்கிறீர்கள்?...இதுவும் ஓர் நீதிமன்றமா?...விடுதலை செய்வதாகக்கூறி, என்னிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கிக்கொண்டு, நம்பிக்கைத் துரோகம் செய்கிறீர்களே, நீங்கள் சூனியக்கர்ரர்களா, நானு?...பொய்யர்கள் நீங்களா? நானு?......புல்லர்கள், நீங்களா? நானு? ஏ, அறத் தெய்வமே!......உலகில் இன்னும் நீ வாழ்கிருய் என்ருல், இந்த நீதிகொன்றவர்களை நிலம் தாங்காமல், நழுவட்டும்! அவர்களைச் சுற்றிலும் காற்று உலவாமல் ஓடட்டும்! வானம் இடிந்து வன்கணர் தலையில் வீழட்டும்!...... வேண்டாம், வேண்டாம் அந்தக் குற்ற ஒப்புக் கடிதத்தை இங்கே கொடுங்கள் (காவலனின் கையில் இருந்த மன்னிப்புக் கடிதத்தைப் பாய்ந்து இழுத்துக் கிழித்து எறிகிருள்) குற்றத்தை ஒத்துக்கொண்டு, ஆயுள் தண்டனை பெற்று, இன்னும் சில நாட்கள் கழித்தாவது நான் குற்றமற்றவள் என்று குவலயத்திற்கு அறிவிக்க வாய்ப்பேபெருமல் அழிவதற்கு மாருக, இன்றே அழிகிறேன், இப்போதே அழிகிறேன்......சொல்லொன்று, செயலொன்று கொண்ட இப்பேய்களை, பிசாசுகளை, சூனியக்காரர்களை, மாயக்காரர்களை இனி ஒருகணமும் பாரேன்! (புலம்பி) ஆ!...ஆயுள் தண்டனை! என்ன கொடிய சொல்! கோரமான பொருள்! ...பிறர் சுதந்திரத்திற்குப் போர்புரிந்த எனக்கா சிறைச்சாலை!... ஐயோ!.......தென்றலைவிடுத்து, தேன் மலர்ச்சியை விடுத்து, திங்களின் கதிரைவிடுத்து, நாட்டு விடுதலையை விடுத்து, ஆயுட் தண்டனையா?......இந்த உயிர் வேண்டாம்!......என்னைத் தீயிலிட்டுக் கொளுத்துங்கள்! அதுதான் இப்போது நான் வேண்டும் விடுதலை! மடைமையரிடமிருந்து விடுதலை! மதவெறியர்களிடமிருந்து விடுதலை! பொய்யர்களிடமிருந்து விடுதலை!! புல்லர்களிடமிருந்து விடுதலை!! (மயங்கி விழுகிருள்)

(திரை)

காட்சி 8

(ரூன் நகர வெட்டவெளி: எரிகம்பம் நடப்பட்டு இருக்கிறது. ஜோனைக் கம்பத்தோடு பிணைத்துக் கட்டித் தீவைக்கிருர்கள். தீ எரிகிறது.)

ஜோன்:- ஏ, பிரெஞ்சு நாடே! நான் வருகிறேன், போய் வருகிறேன். உன் விடுதலைக்கு உழைத்த குற்றமற்ற என்னை கொடுமைக்காரி என்று சொல்லிச் சில கோணல் புத்திக்காரர்கள் எரிக்கிருர்கள். எரிக்கட்டும். என் துன்பம் அவர்களுக்கு இனிக்

கட்டும். ஆனால், என்றாவது ஒரு நாள், நாளையோ, இல்லை நாளை மறுநாளோ இந்த இழிந்தவர்கள் என்னைச் சுற்றிக் கிளப்பி விட்டிருக்கின்ற வதந்திகள் எரியத்தான் செய்யும்........அப்போதாவது ஏ, அகிலமே...... என் மாசற்ற தன்மையை...... ஐயோ, நெருப்பு, நீதியற்றவர்களைப் போல, நல்லவர்களையும் சுடுகிறதே!...என்னை உணர்ந்து கொள். அதுவே எனக்குப் போதும்......அதுவே எனக்கு.......போதும்..........தன் நாடு விடுதலை......(தீ பரவுகிறது.)

(திரை)

(ஒலிபெருக்கி:- உலக வரலாற்றிலே ஒரு வீராங்கனையின் அத்தியாயம் முடிந்து விட்டது. இல்லை, துன்பியலாக முடிக்கப் பட்டது!—......ஆனால் ஜோன் சொன்ன சொல், தான் குற்றமற்றவள் என்று உலகம் என்று வது ஒரு நாள் நம்பும் என்ற சொல், பலித்தது. ஜோனின் வரலாறு, விடுதலை விரும்பிகளுக்கு ஒரு தூண்டுகோல்! அவர்கள் எத்துணைக் கருத்தோடு காரியமாற்ற வேண்டும் என்பதற்கோர் எச்சரிக்கை! பொதுவாக அவர்களுக்கு அது ஒரு பாடம்!......விடுதலை வீராங்கனை ஜோனுக்காக நாமும் சில சொட்டுக் கண்ணீர்த்துளிகளைச் சிந்துவோம்!)

❋

மதிப்புரை:

வரலாறு—தனி மனிதரின் வாழ்க்கை வரலாறு அல்லது நாட்டின் நிகழ்ச்சிகளின் பட்டியல்—எதுவுமே எழுதும் பழக்கம் நமக்கு இல்லை என்பது தெரிந்ததே. அதனால் எத்தனையோ பெருமைகளையும் சிறப்புக்களையும் நாம் இழந்துவிட்டிருக்கின்றோம். இந்தத் தலைமுறையினர் இக்குறைபாட்டை உணரத் தலைப்பட்டுவிட்டனர். உணர்ந்ததினால் வரலாற்றுத் துறையில் புதிய முயற்சிகளில் பலர் ஈடுபடுவதைக் காணுகின்றோம்.

மறை. திருநாவுக்கரசு அவர்கள் அத்தகைய பணி ஒன்றில் கொண்ட நாட்டம் **"மறைமலையடிகள் வரலாறு"** என்ற நூலாக உருப்பெற்றுள்ளது.

பேராசிரியர் மறைமலையடிகளாரை அறியாதார் இரார். தமிழர்தம் விழிப்புணர்ச்சிக்கு வித்து ஊன்றியதோடு, வித்து வெடித்து வெளிவந்த முளைக்கு உரம் இட்டுக் களை எடுத்துப் பயிர் வளர்த்த பண்பாளர் அவர். அவரது வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிவாக விளக்கப்படுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஓவியம்போல் தெளிவாக அமைந்துள்ளது.

இதிலே ஒரு சிறப்பு—ஆசிரியர் அடிகளாரின் மகன் என்பது. குடும்பத்து உறுப்பினராகவும், தந்தையிடம் பெரும் "பக்தி" கொண்ட மாணாக்கராகவும் ஆசிரியர் விளங்கியதால், நூலில் இருக்கவேண்டிய (ஆதாரங்களும்) சான்றுகள் நிறைந்துள்ளன.

தமிழ்த் தென்றல் திருவாளர். திரு. வி. க. அவர்களது வாழ்க்கைக் குறிப்புக்கள் என்ற நூலால் தமிழகத்தின் அரசியல் வரலாறு விளங்குவதுபோல, இந்நூலால் தமிழ் வரலாறு தெரிகிறது.

அடிகளாரின் இல்வாழ்க்கைப் பகுதிகளைப் படிக்கும்போது மனம் நெகிழுகின்றது. கணவனும் மனைவியுமாக இருந்து வாழ்ந்தவர்கள் குழந்தைகளாகக் குழைந்த பகுதி உண்மையிலேயே ஒரு நல்ல குடும்பத்திற்குப் பாடமாக அமையத் தக்கதாகும்.

சுற்றுப்பயணம் உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சியைத் தருவதோடு அறிவையும் வளர்க்கப் பயன்படுகின்றது என்பதனை மேற்கு நாட்டவர் உணர்ந்துள்ளனர். மேற்கு நாட்டவரின் நல்ல பழக்கங்கள் பலவற்றை மேற்கொண்ட அடிகளார் இந்தப் பழக்கத்தையும் ஏற்றுப் பலன் அடைந்திருக்கிறார்.

அடிகள், பார்ப்பன முறைகளுக்குப் பகையாக இருந்தார் என்பது நாடு அறிந்த உண்மை. தம் மகளின் திருமணத்தைத் தமிழ் முறையில் துணிந்து நடத்தியவர் அவர். திராவிட நாகரிகம் உயர்ந்தது என்பதை எடுத்து நிறுவி வளர்த்துப் போற்றியவர். "இந்திக்கு இங்கு என்ன வேலை" என்று வெகுண்டு எழுந்து வீரப் போர்முரசும் ஆர்த்தவர். ஆகையால்தான் இன்றும் பலர் அவர்மேல் கொண்டுள்ள காழ்ப்பால்—மறைமலையடிகள் எழுதியதும் தமிழா? — என்று கேட்கின்றனர். ஆனால் இந்தக் கருத்துக்களை ஆசிரியர் நூலில் பல இடங்களில் விளக்கியுள்ளார். எனினும், இன்று, தான் இருக்கும் நிலையை — சூழ்நிலையை— மனத்தில் கொண்டோ என்னவோ, இக்கருத்துக்களுக்கு முரணான சில பகுதிகளை அமைத்திருக்கிறார். அந்தப் பகுதிகள் உண்மை கலவாதன என்பது படிப்பார்க்குப் 'பளிச்' எனத் தெரிவதை உணரலாகும்.

நூலில் பல இடங்களில் ஆங்கிலச் சொற்களுக்கு ஈடாக நல்ல தமிழ்ச் சொற்கள் கையாளப் பெற்றுள்ளன. டிராயர் என்பதற்கு இடுவை என்றும், பெஞ்ச் என்பதற்கு இருப்பு என்றும், ஜில்லா என்பதற்கு சீர்மை என்றும், பஸ் என்பதற்கு ஓடி என்றும் பல சொற்கள் காணப்படுகின்றன. ஆனால் சீர்மை என்ற சொல் (ஜில்லா) மாவட்டம் என்ற பொருளிலும், பண்பாளர் என்ற பொருளிலும் (பக்கம் 345ல்) பயன்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நூலிலும் அச்சுப்பிழைகளைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது.

அடிகளாரின் பல நிழற்படங்கள் நல்ல ஆர்ட் தாளில் இணைக்கப்பட்டுள்ளன.

நூல் நிலையங்களிலும், வசதி உள்ளவர்களிடமும் இருக்க வேண்டிய நூல்.

பொதுவாக, ஆசிரியரின் முயற்சியையும், ஊக்கத்தையும், உழைப்பையும் பாராட்டவேண்டும். தமிழ் இலக்கியத்திற்கும் இது ஒரு அணி எனலாம்.

"மறைமலையடிகள் வரலாறு"

ஆசிரியர்:

மறை. திருநாவுக்கரசு.

விற்பனை உரிமை:

திருநெல்வேலித்
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற் பதிப்புக் கழகம்,
சென்னை—திருநெல்வேலி.

933 பக்கங்கள்: விலை ரூ. 15.

உள்ளங் கவர்ந்தவள்

அவள் என் உள்ளங் கவர்ந்தவள். முதலில் அவளை நான் அஞ்சல் நிலையத்திற் கண்டேன். விழுங்கும் மெய்ப்பாட்டோடு பார்க்கத் தொடங்கினேன். கையிலிருந்த தந்தித்தாள் நழுவி விழுவதைக்கூடக் கவனிக்கும் உணர்வு இல்லை. சுற்று முற்றும் நிற்கின்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமும் இல்லை. நான் பார்த்துக்கொண்டே நின்றேன்.

நாலைந்து பேர் என்னை நெட்டித் தள்ளினார்கள். அப்போதுதான் தன்னுணர்வு பெற்றேன் சிறிதளவு. திரும்பிப்பார்த்தேன். பின்னால் ஒரு பெருங்கூட்டம் நின்றது தந்தித்தாளும் கையுமாக. வெட்கம் வந்து கப்பிக்கொண்டது. விலகிக் கொண்டேன் வரிசையிலிருந்து.

திரும்பி வந்தேன்-வழி எல்லாம் அவள் நினைவாக. 'ஆமாம், அவள் யார்? அஞ்சலகத்திற் பணியாற்றுபவளாகத் தோன்றவில்லையே! அங்கு வேலை பார்க்கும் யாருக்கேனும் உறவினளா? அல்லது... சொந்த வேலையாக வந்தவளோ? திரும்பவும் போய் விசாரித்து வரலாமா? விசாரிப்பதா? அது சுலபமா, என்ன? அவசரப்பட்டு ஏதேனும் கேட்டுவிட்டால், எல்லாரும் சேர்ந்து நம்மை 'விசாரித்து' அனுப்பிவிடுவார்களே!'

மனம் கேட்கவில்லை. திரும்பிப் போனேன். அஞ்சலகத்தில் கூட்டமிருந்தது, முன்னிலும் பெரிய கூட்டம். நான் ஆவலோடு சன்னலருகிற் சென்றேன். அங்கிருந்து பார்த்தேன்- அவள் அமர்ந்திருந்த இடம் வெறுமையாகக் கிடந்தது. நான் திரும்பவும் அங்கு போவேன் என்று தெரியாது போலும்! அவள் அகன்றுவிட்டிருந்தாள். என் உள்ளத்து ஆவலும் அகன்றது; — அதாவது அகலமாகிக் கொண்டே போனது.

அவள் யாரோ, எந்த ஊரோ, என்ன பேரோ! ஒன்றுமே தெரியவில்லை. யாரிடம் கேட்டறிவது— வெட்கத்தை விடுத்து? அதுவும் தோன்றிவில்லை. நாட்கள் மறைந்து கொண்டிருந்தன. அவள் எண்ணமோ புதுப்புது மெருகுடன் உள்ளத்தில் பளிச்சிட்டுக்கொண்டு வந்தது.

"மணிமுடி, இந்தவிளம்பரத்தைப் பார்த்தாயா?" என்று என் நண்பன் செய்தித்தாளைத் தூக்கிக் கொண்டு என் அருகில் வந்தான்.

கனகு

படித்தான்: "கல்லூரி டியூட்டர் ஒருவர் தேவை. பி. ஏ. முதல் வகுப்பில் தேறியவர்கள் விண்ணப்பிக்க. குமரன் கல்லூரி, புதுவை.

"நீ இதற்கு எழுதிப் போடுகின்றாயா? சென்னையில் இருந்தால் நல்லது என்கிறாய்; இல்லையா?" என்று என் தோளைப் பிடித்து உலுக்கினான் அவன். நான பேசவில்லை.

அவன் மேசைமீதிருந்த தாள் ஒன்றை எடுத்தான்; எழுதினான். என்னிடம் நீட்டினான். நான் சிரத்தை இல்லாமல் அதை நோக்கினேன். எழுதுகோலையும் என்னிடம் நீட்டினான்.

"உம், கையெழுத்துப் போடு."

நான் ஒன்றும் தோன்றாமல் விழித்தேன்.

"உம், போடு. புதுவை அவ்வளவு மோசமான ஊர் அல்ல. வேண்டுமானால் நானும் உன்னுடன் வருகிறேன்."

நான் வியப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.

"உண்மைதான். இரண்டு மாதங்கள் விடுமுறை வாங்கிக்கொண்டு உன்னுடன் வருகிறேன். புதுவை இயற்கை எழில் நிறைந்த ஊராம். வாழ்க்கைக்கு வசதியான ஊராம். அங்கே சில நாட்கள் தங்கவேண்டுமென்று நீண்டநாள் ஆசை."

நான் பதில் சொல்லவில்லை. இவன் பேசுவது ஏதாவது நடக்கக் கூடிய செயலா! யார் இவனுக்கு இரண்டு மாதங்கள் விடுமுறை கொடுத்துப், 'போய் வா' என்று விடைகொடுத்து வழியனுப்பப் போகிறார்கள்! என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன். அவன் நச்சரிப்புக்காகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன்.

நான் எதிர்பார்க்கவில்லை, நாலே நாளில் பதில் வரும் என்று. நண்பன் இரண்டு மாதங்கள் விடுமுறை பெறவில்லை. இரண்டு நாட்கள் பெற்றான். என்னுடன் புதுவைக்கு வந்தான்.

சிறு குழந்தையைப் பள்ளியில் சேர்த்து விட்டு, ஆறுதல் மொழி கூறிச் செல்லும் பெரிய மனிதனைப் போல் நண்பன் என்பால் அறிவுரைகள் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

"இது பாரிஸ் அல்ல — இங்கிருந்து புறப்பட்டுச் சென்னைக்குச் செல்ல வாரக்கணக்காக. இது மினியாட்சர் பாரிஸ்—7 மணிக்குப்

புறப்பட்டால் 10 மணிக்குள் சென்னையை அடையலாம். நீதான் நண்பர்களை வாங்கும் திறன் படைத்தவனாயிற்றே! வரட்டுமா?''

மாதம் ஒன்று சுழன்றது—மனக் குழப்பத்தைப் பெருக்கித் தந்துவிட்டு. காவற்படையினரின் ஆண்டு விழா நிகழ்ச்சியொன்றுக்கு எங்கள் கல்லூரியின் முக்கியமானவர்களை எல்லாம் அழைத்திருந்தார்கள். வெறும் டியூட்டராகிய என்னையும் முக்கியமானோர் பட்டியலில் சேர்த்து வியப்பில் ஆழ்த்தி இருந்தார்கள். சென்றேன் நானும்.

அங்கே கூட்டம் நிரம்பி வழிந்தது. காவற்படையினர் பலவித விளையாட்டுகளை, வேடிக்கைகளை, பயிற்சிகளைச் செய்து காட்டினர். பிறகு சிறிதளவு இடைவேளை. இடைவேளைக்குப் பிறகு இசை நிகழ்ச்சி. நான் எழுந்து வெளியிற் போனேன். திரும்பிவர இரண்டு நிமிடங்கள் அதிகமாயின. அதற்குள், நான் அமர்ந்திருந்த இடத்தை யாரோ கைப்பற்றிக்கொண்டிருந்தனர். நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. மண்டபம் அமைதியடைந்தது. உட்கார இடமில்லை. முன்வரிசையை நோக்கி முன்னேறினேன். நல்ல வேளை, அங்கு யாரோ பெரிய மனிதர் ஒருவர் இடத்தைக் காலி செய்துகொண்டு போயிருந்தார். இடமின்மையை முன்னிட்டு அங்கு போய் அமர்ந்தேன் — நாடகக் கொட்டகையில் கூட்டம் நிரம்பி வழிவதைச் சாக்கிட்டுக், காலரியில் இருப்பவர்கள் முன் வரிசையில் வந்து உட்கார்ந்து கொள்வது போல். அங்கு என்னைச் சுற்றிலும் இருந்தவர்கள் பெரிய பெரிய மனிதர்கள் போலும்! அவர்கள் பேச்சும், சிரிப்பும், பாவனையும் அப்படிக் கூறின. அடிக்கொரு தடவை அவர்கள் என்னைப் பார்த்தனர். என் முகத்தை ஒரு தடவை; என் உடையை ஒரு தடவை;—கூட்டத்தில் நெருக்கியடித்துக்கொண்டு வந்ததால், உடை நகங்கிக் கசங்கிப் போயிருந்தது. காலணியை—செருப்பை—ஒரு தடவை-கூட்டத்தில் சிக்கிக்கொண்டபோது, அது என் பாதத்தின் கீழ் இருப்பது தெரியாமல், தங்களுடையது என்று பலப் பலர் வந்து, அதை மிதித்த காரணத்தால், அது வாரறுந்து போயிருந்தது.

மேடையில் நிகழ்ந்த இசை, இனிமையை வாரிப் பொழியத் தொடங்கியது. அந்த இனிமை செவி வழிப் புகுந்து, உள்ளத்தைத் தாக்கி, எண்ணத்தைக் கிறுகிறுக்க வைத்தது. அந்த இசை வெள்ளத்தில் மண்டபமே கட்டுண்டு கிடந்தது.—தன்னை மறந்து, சுற்றுச் சூழலைமறந்து கட்டுண்டு கிடந்தது.

அப்பொழுதுதான் நான் மேடையை ஏறிட்டு நோக்கினேன்.

அவ்வளவுதான். அந்த அருமையான இசைகூட மறைந்து போயிற்று, என்உள்ளத்தினின்று. வேகமாகப் போய்க்கொண்டிருக்கும் ஊர்தியொன்று திடீரெனத் தடைபோடப்பட்டதால் பெரியதொரு குலுங்கலுடன் நிற்பதுபோல் நின்றது என் உள்ளம். திரும்பவும் அவ்வூர்தி வேறு திசை நோக்கிச் செலுத்தப்படுவது போல் அது திரும்பியது.

'எங்கே என்னையறியாமல் எழுந்து நின்று கூவி, மண்டபத்தின் அமைதியைக் குலைத்து, என்னை ஊரெல்லாம் அறியும்படி செய்துகொள்வேனோ! எங்கே மேடைமீது தாவியேறிக் குழப்பம் விளைத்து, — எல்லாரும் என்னை நோக்கிக் கூச்சலிட, சிலர் ஓடிவர, சிலர் இருந்த இடத்தில் இருந்தபடியே என்மீது எதை எதையோ எடுத்தெறிய, அவை என் மீது விழாமல், மேடைமேலிருக்கும் மற்றவர்கள் மீது விழ, அதனால் அவர்கள் பீதிகொண்டு அலறித்துடிக்க; முடிவாக நாலைந்து காவல் வீரர்கள் என்னைச் சூழ்ந்து தங்கள் கைத்தடியால் விசாரிக்க, மண்டபமே என்னைப் பார்த்துச் சிரிக்கும்படி நடந்து கொள்வேனோ!' என்ற அச்சம் என்னைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டியது. நான் அந்தப் பேரிடரின் விளிம்புவரை சென்றுவிட்டேன். அதாவது எழுந்து நின்றுவிட்டேன். பின்னாலிருந்து 'உட்கார்' என்ற அதட்டல் ஒலி வந்திரா விட்டால், நின்றுகொண்டே இருந்திருப்பேன்! நல்லவேளை உட்கார்ந்துகொண்டேன். எல்லாரும் அந்த இசை மழையில் தங்கள் உள்ளத்தைத் தெப்பமாக நனைத்துக்கொண்டிருந்தார்கள், அதனால் யாரும் என்னைக்கவனிக்க வில்லை. அமர்ந்தேன். மேடையை நோக்கினேன். வைத்த கண் வாங்காமல் நோக்கிக்கொண்டே இருந்தேன். எல்லார் விழியும் அவ்விடத்தையே நோக்கிக்கொண்டிருந்ததால், அவ்வேளை என் பார்வை பெரிதாகத் தோன்றியிராது. எனினும் நான் முன் வரிசையிலிருந்து முன்னிலை கொண்டு, என்மீது அவள் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கலாம். ஏனெனில், என் விழியும் அவள் விழியும் பல முறை ஒன்றையொன்று கண்டு கொண்டன. சொல்லவும் வேண்டுமா? அங்கு இசைமாரி பொழிந்து எல்லார் உள்ளத்திலும் பதிந்தவள் என் உள்ளங் கவர்ந்தவள்தான்.

இரண்டு மணி நேரம், அது இரண்டு கணங்கள் எனப் பறந்தது. இசை நிகழ்ச்சி முடிந்தது. அவள் பின்னோடு செல்லவேண்டுமென்று துடித்தேன். அந்த எண்ணம் அங்கு பலர்க்கு இருந்தது. எல்லாரும் அவளைச் சூழ்ந்துகொள்ள முனைந்தார்கள். 'உய், உய்' என்று சீட்டி அடித்தார்கள். எதை எதையோ கூறிக் கத்தினார்கள். மேடையிலிருந்து அவள் எழுந்ததைப் பார்க்க வில்லை நான். காவலர் துணையோடு அவள் வெளியே சென்றதையும் பார்க்க முடியவில்லை. வெளியிற் சென்றால், ஒரு வேளை அருகில் நெருங்கலாம் என்று வெளியில் வந்தேன். அவள் ஊர்திக்குள் அமர்ந்திருந்தாள். நான் நெருங்கிப் போனேன். காவலரின் கைத்தடி என் முகத்துக்கு நேரே வந்து நின்றது. முன்னேற முடியவில்லை, ஆயினும் அவளை நான் பார்த்தேன. அவள் விழி நோக்கையே என் கண்கள் கண்டு விட்டன. அவ்வளவுதான். கிளம்பியது ஊர்தி. கூட்டம் விலகியது. சென்றாள், — மறைந்தாள் அவள். நின்றேன், — அத்திசை நோக்கி நின்றேன் நான்.

உள்ளத்தில் ஒரு புதுத்தென்பு ஏறிற்று. உடலிலே புதுக் குருதி ஓடிற்று. அவளைக் கண்டதால் ஒரு மகிழ்ச்சி. அவள் விழிகளோடு என் பார்வையை மோத விட்டதில் ஒரு களிப்பு. அந்தக் குதுகுதுப்பில், அவளைப்பற்றிய விவரங்களை எல்லாம் (!) அறிந்து கொண்டேன்.

சொந்த ஊர் சென்னை. புதுவையில் உறவினர் உள்ளனர். அதனால் அடிக்கடி புதுவை வருவதுண்டு. அவள் சிறந்த பாடகி. ஆயினும் பாடுவதே அவள் தொழில் அல்ல. அதன் மூலம் ஊதியம் பெறுவதும் இல்லை. சிறப்பு நிகழ்ச்சிகளில் எப்போ

தாவது கலந்துகொள்வதுண்டு. பெயர்:மலர்க்கொடி;-அதைத்தான் முன்பே தெரிந்துகொண்டேனே. படிப்பு: பி. எஸ். ஸி. யாம்.

நான் எதிர்பார்க்கவே இல்லை அவளிடமிருந்து பதில் வருமென்று. அதை நீங்களே படியுங்கள்:

அன்பரீர்,

"உங்களைப்பற்றி என்னையறியாததொரு சிரத்தை அன்று அஞ்சலகத்தில் கண்டபோதே ஏற்பட்டது. திரும்பவும் புதுவையில் உங்களைக் காணுவேன் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. தாங்கள் தட்டுத் தடுமாறிக் கொண்டு நெட்டித் தள்ளிய கூட்டத்தை ஒதுக்கித் தள்ளிக் கொண்டு, முன் வரிசையை நோக்கி முன்னேறியபோதே உங்களை என் கண்கள் கண்டுவிட்டன. பார்வை முழுதும் உங்கள்மீதே படிந்து விட்ட முன்னிலையால், பாடிய பாட்டும் உங்களை நினைத்தே—ஆமாம், என்னை மறந்து, என் சூழ்நிலையை மறந்து, என்னையே நோக்கிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான சோடிக் கண்களை மறந்து பாடினேன். எல்லாரும் இசை வெள்ளத்தில் இழுக்கப்பட்டுக் கொண்டிருந்தனர் போலும்! அதனால் நான் பாடிய பாட்டின் பொருளை ஆய முனையவில்லை. அப்படிப் பொருளைப்பற்றி எண்ணியவர்கள்கூட அது பக்திப் பாடல் என்று முடிவு கட்டிக் கொண்டனர் போலும்!

"தாங்களோ முதற்பாட்டு முடியும்வரை என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை. சுற்றிலுமிருந்தோரை அளந்துகொண்டோ, எடைபோட்டுக்கொண்டோ இருந்தீர்கள். மூன்றாவது உருப்படிக்கு நிரவல் செய்துகொண்டிருக்கும் போதுதான் தங்கள் கவனம் மேடைமீது விழுந்தது. அது அப்படியே படிந்துகொண்டுவிட்டது. உவகை என்னைத் தலைகால் தெரியாமல் அடித்துப் போட்டுவிட்டது. அதற்குப் பிறகு என்ன பாடினேன், எப்போது முடித்தேன் என்று எதுவுமே எனக்குத் தெரியாது. என்னைப்பற்றி எல்லாமே—ஒன்றுவிடாமல் தங்களுக்குத் தெரியும் என்று எழுதியுள்ளீர்கள். உண்மைதானா? என்னைப் பற்றி நன்கு அறிந்துகொண்டு தான் என்னை விரும்புகின்றீர்களா? கண்டதும் காதல் என்னும் அவசரத் தீர்மானம் எத்தனையோ அலைக்கழிவுகளை மக்களிடையே ஏற்படுத்தி இருக்கிறது. அன்றாடம் — எவ்வளவோ — காதல் முறிவுச் செய்திகளை நாம் கேட்கிறோம். எனவே, நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்,—கேட்டறிவதோடு மட்டுமல்ல, நேரில் பார்த்துங்கூட. எண்ணித் துணிக, துணிந்தபின் எண்ண முனைந்து தாங்களும் இடர்ப்பட்டு, இழுக்குப் பட்டு, என்னையும் அவற்றில் ஆழ்த்த வேண்டா."

மலர்க்கொடி.

அப்போதே கிளம்பவேண்டுமென்றுதோன்றிற்று சென்னைக்கு. ஆவலைச் சற்று அடக்கிக்கொண்டு கடிதங்கள் எழுதினேன். அவளுக்கொன்று, நண்பனுக்கொன்று, என் வீட்டார்க்கு ஒன்று. எனக்கோ தலைகால் புரியாதநிலை. அவள் பன்னிப்பன்னி எழுதியிருந்தவை என்னளவில் எளியனவாகவே தோன்றின. அவளைப்பற்றித்தான் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு விட்டோமே, இனி என்ன புதுமையாகக் கேட்டறிய வேண்டியுளது! இவ்வளவு புகழும், திறமையும், எழிலும் நிரம்பிய அவள் இப்படி எழுதியதையே திருப்பத் திருப்பப் பைத்தியத்தைப்போல் எழுதியிருக்கிறாளே! நான் என்ன உளள உரம் இல்லாதவனா? என் மனம் ஒருநிலையில் நில்லாததா? வாக்குத் தவறுவேன் என்று எண்ணுகின்றாளா? போக்கு மாறிவிடும் என்று நினைக்கின்றாளா? நான் என்ன மலர்வண்டா —பலமலர் விழைய!

எல்லாரும் பதில் எழுதியிருந்தனர். அவற்றைப் படித்தேன். இருமுறை, மும்முறை, பலமுறை படித்தேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. திடீரென்று எல்லாருக்கும் ஏன் இப்படி என் மீது ஐயம் விழுந்துவிட்டது? நான் எப்போதுமே சொன்னதை மீறியவன் இல்லையே!—நண்பன்கூட இப்படி எழுதியிருக்கிறானே! ஓகோ! இந்தக் காலத்துக் காதல் நிலை வளைக்கின்றபடியெல்லாம் வளைந்து கொடுத்துத் தன் போக்கை விதவிதமாக மாற்றிக்கொள்ளும் தன்மையுடையது என்பதால் இப்படி எழுதியிருக்கின்றார்களோ? அவர்கள் எப்படிவேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும். நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லையே என்னை நானே ஏமாற்ற நேர்ந்தாலும் ஒருகால் நேரலாம். அவளை ஏமாற்றுவதோ, அவளுக்கு ஊறு செய்யும் செயலில் ஈடுபடுவதோ எந்தக் காலத்திலும் என்னால் முடியாது.

என் எண்ணத்தைத் திரும்பவும் எழுதினேன் அனைவர்க்கும். திட்டவட்டமாக, தெளிவாக—அவர்கள் என்னைப்பற்றி எவ்வகைக் குறுக்குக் கேள்வியும் கேட்க முடியாத அளவில் எழுதினேன்.

எதிர்பார்த்ததைவிடத் தீவிரமாக ஏற்பாடுகள் நடந்தன. என் பெற்றோர்களைவிட, மலர்க்கொடியின் பெற்றோர்க்குத்தான் மட்டற்ற மகிழ்ச்சி. திருமண நாளை வெகு வெகு அண்மையில் குறித்திருந்தார்கள். ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும் மிஞ்சும் வகையில் மன்றல் விழா கொண்டாட வேண்டுமென்பது பெண் வீட்டாரின் விழைவு. என்பெற்றோரும் அவ்வாறே விழைந்தார்கள். மிகமிக எளிமையாக நடைபெற வேண்டுமென்பது என் பிடிவாதம். மலர்க்கொடியும் அப்படித்தான் விரும்பினாளாம்.

விழாப்பந்தலில் எல்லாரும்வந்து அமர்ந்து விட்டார்கள். தலைமை தாங்குமாறு வேண்டிக்கொள்ளப் பட்டு, அதனை ஏற்றுக்கொண்ட மூதறிஞரும், வாழ்த்துரை வழங்க வந்த பெரியோரும் — ஆக அனைவரும் வந்துவிட்டனர் எனக்கு முன்னே. மலர்க்கொடியும் அங்கே அமர்ந்திருந்தாள். என்வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள். நான்தான் அங்கு கடைசியாகச் சென்றவன். புதுவையிலிருந்து அன்று காலையில் புறப்பட்டேன். ஏறிவந்த ஊர்தி வழியில் பழுதாகி விட்டது. வேறு ஊர்தி தேடிப் பிடிப்பதற்குள் காலந்தாழ்ந்து விட்டது.

எல்லாரும் பரபரப்புடன் செயலில் ஈடுபட்டார்கள். நான் மேடைக்குச் சென்றேன். மலர்க்கொடியும் மேடைநோக்கி வந்தாள் — பெண்டிர் இருவர் பின்தொடர. எல்லாருடைய கண்களும் அவள்மீதே பதிந்தன. நானும் பார்க்கவேண்டுமென்று துடித்தேன். கூச்சம் உள்ளத்தைத் தாக்கிற்று. திரும்பவும் மற்றவர்களைப் பார்த்தேன். 'அவர்கள் எல்லாரும் ஏன் அப்படி வைத்த கண் வாங்காமல் பார்க்கி

றார்கள்? அவள் இங்கே, மேடைக்குப் பாட வருகின்றாள் என்று பார்க்கின்றார்களா? அல்லது ஆட—? அவ்வேளை அவள் என் அருகில் வந்துகொண்டிருந்தாள். நான் நிமிர்ந்து பார்த்தேன்.

"ஆ"

என்னையறியாமல் கூவிவிட்டேன்; பலர் என்னையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தார்கள். சிலர் என்ன என்னவென்று எழுந்து நின்று கேட்டார்கள். ஓடிவந்தான் என் நண்பன் அருகில்.

மலர்க்கொடியைத் திரும்பவும் ஒரு முறை நான் ஏறிட்டுப் பார்த்தேன். சினத்தால் கோரம் கண்டுவிட்ட முகங்கொண்டு பார்த்தேன். "ஏமாற்றிவிட்டாள் என்னை!" சொல்லத் துடித்தது நா. ஒலி ஏனோ வெளிவரவில்லை.

அவள் முகம் சவத்தின் முகமாகி விட்டது. கண்களினின்று புனல் சொரியத் தொடங்கிற்று. தலை கவிழ்ந்து கொண்டாள் அவள்.

திரும்பவும் பார்த்தேன். அவளை மாறி மாறிப் பார்த்தேன். அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. வியர்வை வெள்ளமாக வழியத் தொடங்கியது. தலைமயிர் குத்திட்டுக் கொண்டது. அக்குறிகள் அவளிடமிருந்து என்மீதும் தாவத் தொடங்கின. நான் எதிர்பார்க்கவில்லை; — தடாலென்று அவள் சாய்ந்தாள். சாய்ந்தவள் என்மீதே சாய்ந்தாள். அவ்வேளை என் உணர்வும் மங்கிக்கொண்டுவந்தது. மேலே நடந்தது என்னவோ! அதை அறியேன்.

திரும்பவும் நான் விழித்துக் கொண்டபோது, விளக்கொளியில் இருந்தேன். அங்கே மேடை இல்லை. என்னைச் சுற்றிக் கூட்டமில்லை. அருகில் நண்பனுமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவள் என் எதிரில் இல்லை. பகல் ஒளியில் மங்கிப்போன உணர்வு, விளக்கொளியில் தெளிந்துகொண்டு வந்தது.

மண நாள் குறிக்கு முன்னே மற்றவர்கள் எழுதியிருந்த கடிதங்களை எண்ணினேன். அவள் எழுதியிருந்த அறிவுரைகளை எண்ணினேன். அவளுடைய மலர் விழிகளும், எழில் முகமும் உள்ளக் கண்ணில் ஒளிபாய்ச்சிக்கொண்டிருந்தன. அவ்வொளி பேரொளியாகிக்கொண்டு வந்தது.

எழுந்தேன். பித்தனைப்போல் ஓடத் தொடங்கினேன். எதிரில் நண்பன் வந்தான். "எங்கே மலர்க்கொடி?" என்று இடிகுரலில் வினவினேன். அவன் என் கரத்தைப்பற்றி நிறுத்தினான்.

"என்ன காரியம் செய்தாயப்பா! இன்னும் அவளுக்கு நினைவு வரவில்லையே!"

அக்குற்றச் சாட்டை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஓடினேன் அவள் வீடு நோக்கி. நண்பன் பின்னால் துரத்திக்கொண்டு வந்தான். அங்கே—

பெற்றோரும், மற்றோரும் சூழ்ந்து, அழுது, துடித்துக் கொண்டிருக்க அவள் படுக்கையிற் கிடந்தாள். என் கோலத்தையும், நிலையையும் கண்டு அஞ்சியோ, என்னவோ எல்லாரும் ஒதுங்கி நின்று வழிவிட்டனர். நெருங்கினேன் அவளை.

"மலர்க்கொடி"

விளித்தேன் என் உள்ளத்து உணர்வை எல்லாம் ஒன்றுதிரட்டி.

அங்கே அசைவு காணவில்லை. அவள் கரத்தைப் பற்றினேன். பற்றிக்கொண்டு அவளைப் பார்த்தபடியே இருந்தேன், சாம்பிப்போயிருந்த எழில் வதனம் மெல்லமெல்ல ஒளி பெற்றுக்கொண்டு வந்தது. என் உள்ளம் எல்லையில்லா மகிழ்வில் திளைத்தது. எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

திடீரென்று விழித்துக்கொண்டாள் அவள். அங்கு நின்ற வேறு யாரையும் பார்க்கவில்லை அவள். என்னையே பார்த்தாள். உற்று உற்றுப் பார்த்தாள். வாயடைபட்டுக் கிடந்தேன் நான். அவள் பேசினாள்:

"என்மீது நீங்கள் கொட்டியிருந்த ஆசையை எல்லாம், ஆவலை எல்லாம் ஒரு கணத்தில் மாற்றிக்கொண்டுவிட்டீர்கள் அல்லவா — நான் நொண்டி என்று தெரிந்ததும்? உங்கள் ஆசை என் உடல்மீது, என் வெளிப்பகட்டின் மீது மட்டுந்தான்! உணர்வின்மீது இல்லை. இல்லையா?

"இல்லை, இல்லை" என்றேன் நான். நா குழறியது. எப்படியோ சமாளித்துச் சொன்னேன். "நீ தான் என் உள்ளங் கவர்ந்தவள். இனி உன்னை ஒரு கணப்பொழுது கூடப் பிரிந்திருக்கமாட்டேன்"

"அது ஒன்றே போதும். நீங்கள் தான் என் கணவர்."

திரும்பவும் மூடிக்கொண்டன கண்கள். சாம்பிவிட்டது வதனம். சில்லிட்டுவிட்டது உடலம். ஆமாம்! சவமாகிவிட்டாள் அவள்.

நான் அடித்துக்கொண்டேன்; துடித்தேன்; மோதினேன். விக்கினேன்; விசித்தேன். என் உள்ளங் கவர்ந்த அந்நல்லாளை இனி எங்கே மெய்யுருவில் காணப்போகிறேன்— உள்ளத்தால் காண்பதல்லாமல்!

★

இராசை. கி. அரங்கசாமி அவர்கள் புதுமைக் கருத்துக்களை நல்ல தமிழ்ப்பாக்கள் வடிவில் அளித்து வருவதைத் தமிழகம் அறியும். இப்போது அவர் "தமிழன் உலா" என்ற ஒரு நூலை அளித்துள்ளார்.

உலா என்பது இடைக்காலத்தில் தோன்றிய இலக்கிய வகைகளில் ஒன்று. மன்னன் உலா வரும்போது அவனைக் கண்ட பெண்கள் பலர் அவன்பால் வேட்கைகொண்டு வெதும்புவதாகப் பாடி, மன்னனை மகிழ்விப்பது அந்த நூல்முறை. அந்தப் பாடல் முறையை எடுத்துக் கொண்டு, பொருளைத் தள்ளிவிட்டுப் புதிய கருத்துக்களை ஆசிரியர் அளித்துள்ளார். "அவற்றை இந்நூலாசிரியர் விட்டமையால் நூலின் சுவை குறையவில்லை. நூல் நாகரிகச் சிறப்புடையதாய் விளங்குகிறது" என்று டாக்டர் மு. வ. அவர்கள் பாராட்டியுள்ளார்.

தமிழ்ப் பெண்கள், தமிழ்ப் பண்பைப் போற்றி வீரமகளிராக விளங்குதற்கு முற்படும் நிலை, நூலில் கூறப்படுகிறது.

நல்ல நூல்: ஆசிரியரின் முயற்சி வளரும் வகையில் தமிழகம் அவரை ஊக்கவேண்டும்.

"தமிழன் உலா"

ஆசிரியர்:

இராசை. கி. அரங்கசாமி.

விலை ரூ. 1.

திருக்குறள் பதிப்பகம்; இராசிபுரம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

திட்டமிட்டேன். காடுகளைக் கூடாரமாக்கிக்கொண்டேன்! கூனர்களை நிமிரச் சொன்னேன்! விழி திறந்திருந்தும் காணாது இருந்தவர்களைக் காணச்செய்தேன்! ஊமையரல்ல, உள்ளத்தில் பட்ட உண்மையை எடுத்துக் கூறுங்கள் என்றேன். பாமரரைப் படைவீரராக்கினேன்! நான் வாழ அல்ல. நாடு வாழ! செல்வம் தேட அல்ல, சீரழிவைத் தடுக்க. மாதரின் கற்புக்கு ஆபத்து ஏற்படக் கூடாதே! மாதாவிடமிருந்து மகனைப் பிரிப்பது மாபாவமாகுமே! உழைப்பவனை உருக்குலைய வைப்பது ஊராள் முறை அல்லவே!—என்பதால், அரசுக்கு எதிராக வேலை செய்தேன். என்னைப் பிடித்திட என்னென்னவோ திட்டமிட்டனர், தோற்றனர், எவரெவரையோ ஏவினர், வெற்றி கிட்டவில்லை! ஓயாத உழைப்பு, நோய்வாய்ப்பட்டேன்—இங்கு வந்தேன், அடைக்கலம் என்று. படையால் பிடித்திட முடியவில்லை, என்னை; பாவி மகளே! படுத்துக் கிடந்தேன உணர்வற்று, அந்த நிலையில், பத்தாயிரம் பொன் பரிசு தருவார்கள் என்று ஆசைப்பட்டு, உளவு கூறி, என்னைப் பிடித்துக் கொடுத்தாயே! நீ பெண்தானா!!'' — என்று அவன் பேசிடக் கேட்டால், அவனை மாவீரன் என்று மட்டுமல்ல, விடுதலை வீரன், வீரத்தியாகி, என்றெல்லாம் பாராட்டவும், அவளைக் கள்ளி என்று இடித்துரைக்கவும், "வீரத்திலகமே! இந்த மாபாவி நின்றிருக்கும் மண்ணில் உன் கால்படுவதுகூடத் தகாது! வா, வீரனே, வா! எமது இதயத்தைப் பெயர்த்தெடுத்து, மாலையாகத் தொடுத்து உனக்கு அணிவிக்கப் போகிறோம். மக்கள் மன்றம் வா! மாண்புமிக்கவனே! நீ வாழும் நாட்களிலே, நாங்கள் வாழ்கிறோம் என்பதொன்றே எமது நெஞ்சை விம்மிடச் செய்கிறது'' என்றெல்லாம் பேசிடச் செய்யும்—பேச வேண்டும்.

அதுபோலத்தான் பேசப்போகிறேன், என்று துவக்கிவிடாதே, தம்பி! இப்படி இருந்தால், எப்படிப் பேசவேண்டி நேரிடும் என்பதையும் எண்ணிப்பார்.

''அடி கள்ளி! அரண்மனையில் தவழும் அன்னங்கள் எல்லாம், என் கண்ணடிக்குப் பலியாகி வீழ்ந்தன—நான் தொட்டேன், மகிழ்ந்தன! காட்டுமல்லிகை நீ! பாட்டுமொழி பேசினேன் உன்னிடம்; நீ பணிய மறுத்துவிட்டாய். அங்கம் தங்கம், என்னை ஆரத் தழுவிய ஆயிரம் ஆரணங்குகளுக்கு! கருநிறம் உனக்கு! உழைத்துப் பிழைக்கவேண்டியவள் நீ! நீ மறுத்தாய், என மஞ்சம் வர!! சந்தனக்கட்டையாலான காலணி போட்டுக்கொண்டு, சப்பாத்திக் கள்ளிக்காக, காடு அலைவாரில்லை. நானோ சரசாங்கிகளின் சல்லாபத்தை, போதும்! போதும்! என்று கூறிவிட்டு, உன்னைத் தேடிவந்தேன், மாடப்புறாவே, மடமயிலே, மாதுளைக் கொத்தே, மனமகிழ் மலரே, காதளவோடிய கண்ணினை உடையாய், காற்றினில் ஆடிடும் கவின மலர்க்கொடியே!—என்றெல்லாம், எவளிடமும் நான் பேசினதில்லை, எவர் பேசியும் நீ கேட்டிருக்கமாட்டாய். பேசத் தெரிந்தவனுக்கும், உன்னைக் கண்டால் பேசத் தோன்றுது—எனினும், அதுபோலெல்லாம் பேசினேன்—நீ என்னை அடித்து விரட்டினாய்! துடிக்கத் துடிக்க உன்னை...... முடியும் என்றால்...... ஆனால் கசக்கி முகர்ந்தால், மலர் மணம் ஏது என்று காத்திருந்தேன்—நீயோ, மன்னனிடம் மண்டியிட்டு அழுது, என்னைக் 'குற்றவாளி' ஆக்கி, சிறையிலும் தள்ளிவிட்டாய், இப்போது!! எங்கே சிறைச்சாலை! எங்கே காவலர்கள்! மன்னன் ஆணை மண்ணாகிறது! மாதே! கற்பு கற்பு என்று விக்கிவிக்கிப் பேசுவாயே, அது என்ன ஆகப்போகிறது பார்! சிறையிலே தள்ளிப் பூட்டிவிட்டார்கள், இனி அவன் நம்மை என்ன செய்யமுடியும் என்று, சிறுமதி கொண்டவளே, மெத்தத் தைரியமாக இருந்திருக்கிறாய்! இனி?''—என்று அவன் பேசுகிறான், என்று வைத்துக்கொள். தம்பி! அவனைப் பாராட்டவா முடியும்! இனி? என்று அவன் கூறி வாய்மூடு முன், அவனமீதல்லவா பாய்ந்திருப்பாய்!

"உண்மைதான் அண்ணா! அவன் யார்? என்ன போக்குடையவன்? அவன் செயலால் விளைவது யாது? என்று அறியாமுன்னம், வீரதீரச் செயல் புரிந்தவன் என்ற உடனே பாராட்டலாம் என்ற துடிப்புத்தான் ஏற்பட்டது. ஒவ்வொரு கட்டமாக, தீட்டிக் காட்டிக்கொண்டே வரும்போதுதான், ஒவ்வொரு கட்டத்தின்போதும், ஒவ்வோர் வகையான உணர்ச்சி ஏற்பட்டது, என்று கூறுகிறாய். சரி! ஆனால், தம்பி! இதனையே ஒரு நாடகமாகக் கண்டால்? வீரத்தை அக்கிரமத்துக்கு, திறமையை தகாதகாரியத்துக்குப் பயன் படுத்தியவனைக் கண்டிக்கவேண்டும் என்பதற்காக, மாதரின் கற்பைச் சூறையாடிடும் மாபாவி வேடமிட்டு நடித்தவனைக் கண்டிக்கவா, கிளம்புவாய்! இல்லை அல்லவா? நடிப்புத் திறமையைப் பாராட்டுவாய்! அதுபோலத் தம்பி! நான், நிதி அமைச்சர் சுப்பிரணியத்தைப் பாராட்டுகிறேன்.

சந்துமுனை நின்று சத்தமிடும் சத்தற்றதுகளுக்குச் சீற்றம் மேலிடும். என்ன மண்டைக் கர்வம் இவனுக்கு! காமுகனைப்பற்றிக் கூறிவிட்டு, கணக்கிலே புலி, வாதத்திலே வேங்கை, என்று கூறத்தக்க, எமது அமைச்சர் பெருமகனை அந்தக் கதைப்போக்குடன் இணைத்துப் பேசுவதா! இதைக் கேட்டபிறகும் நாங்கள் சும்மா இருக்கமுடியுமா! — என்றெல்லாம் கொதித்துக் கூறுவர்.

நான், தம்பி! கருத்து விளக்கத்துக்காக, கதை வடிவமாக்கித் தந்தது; 'கனம்' அவர்களைக் காமுகனோடு ஒப்பிட அல்ல! கல்லாமை, கயமை எனும் பிணிகளால் பிடிக்கப்பட்டவனல்ல, நான்.

கதை வடிவிலே, நான் சொல்லவந்தது, எவருடைய அறிவாற்றல், வீரதீரம், அஞ்சாநெஞ்சம்—எனினும், அவர்களின் போக்குக்கான காரணம், அதனால் ஏற்படும் விளைவுகள், நிகழ்ச்சிகளுக்குள்ள பின்னணி என்பன போன்றவைகளை எல்லாம் ஆய்ந்தறிந்து கண்டபிறகே, பாராட்டுவதா அல்லவா, என்ற முடிவுக்கு வரமுடியும் — மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் முழு உண்மை தெரியாது என்ற கருத்தை விளக்க.

அதன் தொடர்ச்சியாக் அறிவாற்றல், திறமை தீரம், என்பவைகளைக் காட்டிடுவோர் என்பதுகூட அன்றி, அத்தகையோர் போல வேடமிட்டு நாடகமாடிடுவோரைக் கண்டால், என்ன கூறத்தோன்றும் என்று எண்ணினேன் — நடிப்புக்கு நமது பாராட்டுதலை வழங்குவோமல்லவா, அதைக் கூறினேன். அதைக் கூறும்போது, நடிப்புத்திறமையைக் காட்டும் பான்மையில் பேசிவரும், நிதி அமைச்சரின் நினைவும் வந்தது; அவரையும் நாம் பாராட்டத்தானே செய்கிறோம், என்ற நினைவு தொடர்ந்தது; அதைத்தான் கூறினேன் — அவரைக் காமுகனுடன் ஒப்பிட்டுவிட்டேன் என்று தப்பாக எண்ணிக்கொண்டு, புதிய

கதர்ச்சட்டைகள் கோபித்துக்கொள்ளக்கூடாதே என்பதற்காக இந்த விளக்கம் தருகிறேன்.

அமைச்சரிடம் உள்ள திறமையை, அறிவிலி! நடிப்புத்திறமை என்று கூறுகிறாய். ஏய்! பதினைந்து!! அவர் சாமான்யர் என்று எண்ணிக்கொண்டாய்—அவருக்குப் பக்கத்தில், நூற்றுஐம்பது — தெரிகிறதா?—என்றெல்லாம் கோபமாகப்பேசிக்கனம்களின் கண்ணில்படவேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் 'துந்துபிகள்' முழக்கமிடுகின்றன; கேட்கிறது! அமைச்சர்களென்ன, பக்தர்களைப்பற்றியேகூட, இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. நாடகத்தில் உன் அடியார்போல் நடித்து என்பது மேற்கோளுக்காகக் கொள்ள வேண்டுகிறேன்.

நடிப்பு, அமைச்சரிடம் ஏது? என்பர்.

எதிர்க்கட்சிகள், அதிலும் குறிப்பாக தி. மு. க' பயனற்றவை, வலிவே இல்லாதவை, வளர்ச்சியே அடையாதவை, அவைகளைப்பற்றிக் கவலைப்படவே தேவையில்லை, என்று பேசுகிறாரே, அது நடிப்பு!

வடக்கு—தெற்கு என்று பேசுவது பேதைமை, அதை ஒரு தத்துவமாகக்கொள்வது மடைமை, அதை மக்கள் காதுகொடுத்துக் கேட்பது, கொடுமை—என்றெல்லாம் பேசுகிறாரே, அது நேர்த்தியான நடிப்பு!

திறமையும் இருக்கிறது. மறைக்கவில்லை, ஆனால் எதில்? எவ்வகையில்? என்ன விளைவுகள்! என்பவைகளைத்தானே முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது ஒரு திறமை! அவைகளைச் சமயம்பார்த்துப் பயன்படுத்துவது திறமையில் குறிப்பிடத்தக்கவை. எதிரியின் வாய் அடைத்துப்போகும் என்று தன் கட்சிக்காரர்கள் நம்பவேண்டும் என்பதற்காகவே, புள்ளிவிரங்களைக் காட்டுவது, ஒருவிதத்தில் திறமைதானே!

நான், கதைவடிவில் காட்டிய 'வீரன்' — கத்தி கட்டாரி தூக்குவான் களத்தில். அமைச்சருக்கு புள்ளிவிவரம், ஆயுதம் என்று தோன்றுகிறது.

ஆனால், அதே 'போர் முறை'யைக் கையாள எண்ணி, புள்ளிவிவரங்களைக் கூறினால், அமைச்சர்கள், என்ன செய்கிறார்கள்? இப்படி எல்லாம் பேசுகிற இந்தத் தி. மு. கழகத்தவர், யார் தெரியுமா? அவர்களுடைய யோக்யதை தெரியுமா, பூர்வோத்திரம் அறிவீர்களா, என்று மூலைவாரி ஓடும் காளைகள்போல, வேறு பக்கம் சென்று விடுகிறார்கள்.

தமக்கு எல்லாப் பிரச்சினைகளும் புரிந்துவிட்டது, தமக்கு மட்டுமே புரிந்திருக்கிறது தமக்குமட்டுமே புரியும்! — என்ற நம்பிக்கையுடன் அமைச்சர் இருக்கிறாரோ, என்னவோ! அப்படிப்பட்ட நம்பிக்கை இருப்பதுபோலப் பேசுகிறார். அது நேர்த்தியாக இருக்கிறது. அதை நான் பாராட்டியிருக்கிறேன். இதைக்கூட பெருந்தன்மையின் விளைவு என்று கொள்ள முடியவில்லை அவர்களால்.

சட்டசபையிலே, எதிரிலே, தி. மு. கழகத்தார், எங்களைத் திறமைசாலிகள்! ஆற்றல்மிக்கவர்கள்! என்றெல்லாம் பாராட்டுகிறார்கள். வெளியே வந்துதான், கன்னாபின்னா என்று கண்டபடி பேசுகிறார்கள்—என்று பொருள்பட நிதி அமைச்சர் பேசுவதாகப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அவரும் அதனை மறுத்திடவில்லை.

என்ன எண்ணிக்கொண்டு அவர் அவ்விதம் பேசுகிறாரோ புரியவில்லை.

இந்தப்பயல்களுக்குச் சட்டசபையிலே பேசப்பயம். அங்கே கைகட்டி வாய்பொத்தி இருக்கிறார்கள்.

அங்கு ஏதாவது பேசினால் அமைச்சர்கள் சும்மா விடமாட்டார்கள்.

இவ்விதமெல்லாம், தம்முடைய கட்சிக்காரர் பேசி மகிழவேண்டும்; மந்திரியாக்கிவைத்தவர்களுக்கு இந்த இனிப்புப் பண்டமாவது தராவிட்டால் நல்லதல்லவே என்ற நினைப்பிலே பேசுகிறாரோ என்னவோ! அந்தக் காரணத்துக்காகப் பேசுவதானால் நான் குறை சொல்வதற்கில்லை. அமைச்சர்களும் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தாகவேண்டுமல்லவா! செய்யட்டும். ஆனால் அமைச்சரே உள்ளபடி நாம் ஏதோ பயந்துகொண்டிருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருப்பாரானால், பரிதாபப்படவேண்டி இருக்கிறது.

தம்பி! ஒன்றுமட்டும் கூறுவேன். நூற்றுஐம்பது பேருக்கு எதிரே பதினைந்து பேராக நாம் உட்கார்ந்துகொண்டு, எதிர்க்கட்சி என்ற கடமையை அச்சம் தயை தாட்சணியத்துக்குப் பலியாகாமல், எண்ணிக்கை பலத்தைக்கண்டு அஞ்சாமல், பணியாற்றி வருகிறோமே, அந்த வகையிலும், அளவிலும், இன்றைய அமைச்சர் அவையில் உள்ள தலைவர்கள் எண்ணிக்கை பலமிழந்த பிறகு, அறிவாற்றலை, அஞ்சாது பணிபுரியும் கடமையைச் செய்யக்கூடியவர்களா, என்று கேட்டால்! அவர்கள் கோபித்துக்கொண்டாலும் பரவாயில்லை, உண்மையைக் கூறுகிறேன் ஒருநாள் கூட முடியாது!

பணக்காரன் வீட்டுப் பாயாசத்திலே பதம் சரியாக இல்லாவிட்டாலும், வெளியே சொல்லமாட்டார்களல்லவா—அதுபோல எண்ணிக்கை பலம் மிகுந்திருக்கிற கட்சி என்பதால் பேச்செல்லாம் அறிவுரை என்றும், எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் போக்கு வீரதீரம் என்றும் கொள்ளப்படுகிறது; கூட்டல் கழித்தல் கணக்கெல்லாம், புள்ளிவிவர நிபுணத்துவம் என்று கருதப்படுகிறது; வேறென்ன?

அமைச்சர்கள் எதிரே பயந்துகொண்டு கிடப்பவர்கள் எவருமில்லை! அவர்கள் என்ன பக்கத்திலே வெடிகுண்டா வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், மிரட்ட! அதிகாரிகள் கஷ்டப்பட்டுத் தயாரித்த 'அறிக்கைகளை' எதிரே அடுக்கி வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார்கள்.

நாம் பதினைந்தே பேர்தானே என்ற பயம் எப்போதும் ஏற்பட்டதில்லை.

இங்குகூடக் கிடக்கட்டும்—பதினைந்து பேர்களாவது இருக்கிறோம்.

கோவிந்த வல்லப பந்த் இருக்கிறாரே, அவருடைய முழு உருவத்தையும் பார்க்காமல், முகத்தை மட்டும் சற்றுத் தொலைவிலிருந்து பார்த்தால், கூண்டுக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டிருக்கும் சிங்கம் போலத் தோற்றமிருக்கும். அங்குதான் தி. மு. கழகத்தினர், இரண்டே இரண்டு பேர்—இளைஞர்கள்—இருக்கிறார்கள்—இளித்துக்கொண்டு அல்ல, இச்சகம் பேசிக்கொண்டு அல்ல — பயந்துகொண்டு அல்ல—இந்தியா ஒரு நாடு அல்ல! பல இன மக்கள் கொண்ட ஒரு துணைக்கண்டம் என்று பேசிக்கொண்டு.

இருவர்! ஐந்நூற்றுச் சொச்சம், ஆளுங் கட்சியினர்—அதிலே ஒரு அரை டஜன் பேர்களாவது சுதந்திரப்போராட்ட காலத்திலே, 'அசகாய சூரர்கள்' என்று பெயரெடுத்தவர்கள்.

அச்சம், நிச்சயம் ஏற்படாது. காரணம் அறிந்து கொள்ளக் கனம்களும், அரசியல் இலாபம் தேடும்

இனம்களும், விரும்பினால் கூறுகிறேன்—தனிப்பட்ட ஆட்களின் வீரதீரத்தின் போக்கு அல்ல அதற்குக் காரணம்—நாம் கொண்டிருக்கிற கொள்கையின் தூய்மையில், நமக்கு இருக்கும் அப்பழுக்கற்ற பற்று, அசைக்கமுடியாத நம்பிக்கை! அதிலிருந்து பிறப்பதே நமக்கு உள்ள அறிவாற்றல், அஞ்சா நெஞ்சம், ஆளடிமையாகாத் தன்மை.

இத்தனைக்கும் சட்டமன்றம், பாராளுமன்றம் எனும் இடங்களிலே உள்ள தி. மு. கழகத்தினர், எல்லாச் சுகத்தையும் ஆண்டு அனுபவித்துவிட்டு அலுத்துப்போன, "சஷ்டியப்த பூர்த்திகளல்ல." ஆசாபாசங்கள், கோபதாபங்கள், கொந்தளிக்கும் நிலை என்று கூறத்தக்க வாலிபப் பருவத்தினர்—(நான் தான் 51—) எனினும், வெள்ளைவேட்டிப் பண்டாரங்களாகி விட்டவர்கள்!

தங்களை 'மேதாவிகள்' என்று கருதிக்கொண்டு, இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்களுமல்ல, மேதாவிகள் என்போர், பதவியில், மேலுக்குமேல் தாவிக் கொண்டிருக்கிறார்களே, நாமாவது இதைச் செய்வோம், என்ற எண்ணத்தால் உந்தப்பட்டவர்கள்.

ஆசைதான் துன்பத்துக்குக் காரணம், என்றார் புத்தர்.

ஆசை, அச்சத்துக்கும் காரணமாக அமைந்து விடும்.

சட்டசபைக்கு வந்துவிட்டோமே, ஒரு நாலு கமிட்டிகளில் இடம் கிடைக்கவேண்டாமா, இரண்டு மந்திரிகளுடைய நேசமாவது ஏற்படவேண்டாமா, உறவினரில் ஒரு நாலு பேருக்காவது வேலை வாங்கிட வேண்டாமா, என்ற ஆசை ஏற்பட்டிருந்தால் அச்சம் அதைத் தொடர்ந்து படரும். இதைப் பெறவேண்டுமானால் அமைச்சர்களைக் குறை கூறாமலிருக்கவேண்டும்; அவர்களுக்குப் பிடிக்காத விஷயத்தைப் பேசக் கூடாது; அவர்களுக்குச் சங்கடம் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் கிளறக் கூடாது என்றெல்லாம் தோன்றும். எதைப் பேசினால் எந்த அமைச்சருக்குக் கோபம் வந்துவிடுமோ, என்ற அச்சம் பிடித்தாட்டும். பிறகு 'ஐயா!' ஒரு சேதி கேளும்! இந்த அடிமைக்காரன் சொல்லும் வார்த்தை கேளும் என்று நொண்டிச்சிந்து பாடிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

ஆசை இல்லை, எனவே அச்சம் இல்லை.

அமைச்சர்கள், எமக்குத் தரக்கூடியது என்று ஒன்றும் இல்லை.

ஒன்று கேட்டேன், துவக்கத்திலேயே—இதயத்தை! திறமையை; வேண்டுமானால் காட்டுகிறேன் என்றனரே தவிர, இதயத்தைத் தரவில்லை. எமது கொள்கைகளுக்கு இதயத்தில் இடம் கொடுங்கள் என்றுதான் கேட்டேன்.

ஆசை அற்ற இடத்தில், அச்சம் எழக் காரணம் இல்லை.

அமைச்சர் சுப்பிரமணியம், நமது தோழர்களின் பண்பையும் ஜனநாயகத்துக்கு இன்றியமையாத அடக்க உணர்ச்சியையும் பயம் என்று எடுத்துக் கொண்டாரோ என்னவோ!

பதினைந்து பேர்கள் சட்ட மன்றத்தில், திட்டமிட்டு, பண்பு கெடாத வகையில் பணியாற்றுவதால் காங்கிரஸ் உறுப்பினர்களிடமேகூட ஏற்பட்டுக் கொண்டுவரும் மனமாறுதலை அமைச்சர், உணருகிறாரோ, இல்லையோ, அதைத் துளிகூட வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் இருக்கிறாரே, அதைத்தான் நான், நேர்த்தியான நடிப்பு என்று கூறுகிறேன்—பாராட்டுகிறேன்.

தகவல் கோரியும், விளக்கம் பெறவும் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்குப் பதில் கூறப்படுகிறதே, அதிலே எத்தனை முறை அமைச்சர்கள், மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும்—இது மத்திய சர்க்காரைப் பொறுத்த விஷயம்—மத்திய சர்க்கார் இணங்கவில்லை-என்று பதிலளிக்கிறார்கள்.

இந்தப் பதில்கள் எதைக் காட்டுகின்றன? இன்றுள்ள அரசியல் முறையின்படி, இந்த அரசு முழு அதிகாரம் பெற்றதாக இல்லை, போதுமான அதிகாரம் பெற்றதாகவும் இல்லை என்பதைத்தானே.

இந்த உண்மை சட்டசபையில் ஒப்புக்கொள்ளப்படுகிறதே—அதுபோதும் எங்களுக்கு! அதைப்பெற நாங்கள் அங்கு வந்தவர்கள்—வேறு எந்த ஆசையும் எமக்கு இல்லை—எனவே அச்சமும் இல்லை.

> "டெல்லிக்காரர்களைத் தட்டிக் கேட்கத்தக்க துணிவை இந்தத் துரைத்தனத்தார் இன்னும் பெறவில்லை. அண்டை ராஜ்யமான ஆந்திர ராஜ்யத்தில் அமைச்சர்கள், மத்திய சர்க்காரின் மூலம் தங்கள் ராஜ்யத்துக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்காக, மத்திய சர்க்கார் மூலம் தங்கள் ராஜ்யத்தில் ஏற்படவேண்டிய தொழிற்சாலைகளைக் கேட்க, மத்திய சர்க்கார் தக்க விதத்தில் ஏற்படுத்தவில்லை என்று மத்திய சர்க்காரின் மீது குற்றம் சாட்டத்தக்க துணிவைப் பெற்றிருக்கிறார்கள். நமது ராஜ்ய அமைச்சர்கள் அதைக் கவனிக்கவேண்டும்—ஆனால் நமது மாநில அமைச்சர்கள் எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். நமது ராஜ்யத்தில் மத்திய அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைப்பற்றி நாங்கள் பேசும்போதெல்லாம் இவர்கள், மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள்.........
> **பிற மாநில துரைத்தனங்கள் எல்லாம் மத்திய சர்க்காருடன் போராடித் தங்கள் மாநில நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி எடுத்துக்கொள்கின்றன. ஆனால் இந்த மாநில அமைச்சர்களோ, ஐந்து வருஷத்துக்குக் குத்தகைக்கு எடுக்கப்பட்டு, மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு அனுப்பப்பட்டவர்கள்போல, எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள்.**

தம்பி! 16—3—60ல் சட்டசபையில், நான் கூறியது இது.

இதைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுத்தான், அமைச்சர் வெளியே சென்று, சட்டசபையில் அவர்கள் எங்களைக் கண்டிப்பதே இல்லை, குறை கூறுவதே இல்லை, அவ்வளவு பயம் அவர்களுக்கு என்ற கருத்துப்படப் பேசுகிறார். விந்தை மனிதர்!

"மந்திரிகளாக வந்து அமர்ந்திருக்கும், மாமிசப் பிண்டங்களே! உங்களை இந்த மாநிலத்து மக்கள் காரித் துப்புகிறார்கள்! ஏன், பிசின் போட்டு ஒட்டப்பட்டது போல், பதவியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். மக்களுக்கு வயிறாரச் சோறுபோட முடியாத நீங்கள், விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத நீங்கள், தொழிலை வளர்க்கமுடியாத நீங்கள், ஏன் கொலுப் பொம்மைகளாக உட்கார்ந்திருக்கிறீர்கள். வெளியே போய்விடுங்கள்! மக்கள் வாழ்வு துலங்கும்!

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்... } அலுவலகம் 15 இல்லம் ...118

பதவியை விட்டு விலகுங்கள், பசி பஞ்சம் பட்டினி போகும்!''

இவ்விதமெல்லாம் சட்ட சபையில், நாம் பேசுவோம் என்று அமைச்சர் எதிர்பார்த்திருந்தால் நிச்சயம் அவருக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கும். ஏனெனில் நாம் அவ்விதமான காட்டுமிராண்டித்தனத்தை நம்பிப் பிழைக்கும் அரசியல் இலாபச் சூதாடிகள் அல்ல.

நாக்கில் நரம்பின்றி, பதவியில் இல்லாதபோது காங்கிரசார், மற்றக் கட்சியினரைப் பேசி வந்தார்களே, அதுபோல நாம் பேசமாட்டோம். அது பண்புமல்ல—மரபும் அது அல்ல.

இவ்விதமும் கூறிவிட்டு, காமுகன் கதை கூறிக் 'கனம்'பற்றி இணைத்துப் பேசலாமா, என்று எண்ணிக் காங்கிரசார் வருத்தப்படவேண்டாம்.

மீண்டும் ஒரு முறை துவக்கத்தைப் படித்துவிடவேண்டும். படித்தாகிவிட்டதா! சரி! வீரதீரம், அஞ்சா நெஞ்சம், எதிர்ப்புக் கண்டு பொருட்படுத்தாத தன்மை, இவைகளை மட்டும் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் முழு உண்மை விளங்காது, எல்லாக் கட்டங்களையும் எண்ணி எண்ணிப் பார்த்தால் மட்டுமே உண்மை துலங்குமோ, அதே போலத்தான் நமது அமைச்சர்கள் அல்லது காங்கிரஸ் அரசு, குறித்து, மதிப்பிடவேண்டுமானல் அவர்கள் காட்டும் புள்ளி விவரக் கணக்கு எண்ணிக்கை பலத்தால் ஏற்படும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கு, நையாண்டிப் பேச்சை வாதமாக்கும் வல்லமை, இவைகளை மட்டும் பார்த்தால் போதாது, இவர்களுக்கு உள்ள அதிகாரம் இவர்களை ஆட்டிப்படைப்பவர்களிடம் உள்ள அதிகாரம் ஆகியவற்றையும் கவனித்துப் பார்க்கவேண்டும்.

துவக்கத்திலே காட்டினேன் வீரதீரச் செயலில் ஈடுபட்டவனை.

இதோ, இன்னொருவர்.

சுற்றாத நாளில்லை! போகாத ஊரில்லை! தேடாத புள்ளி விவரமில்லை! வாதம், நேர்த்தியாக! துணிவு, அளவுக்கு அதிகமாக!—அவருக்கு.

திங்களன்று விமானம் ஏறுகிறார்—செவ்வாயன்று மனுக்கொடுக்கிறார்—வியாழன்வரை காத்திருக்கிறார்—வெள்ளி வீடு திரும்புகிறார்—வெறுங் கையோடு.

இந்தியா முழுமைக்கும் திட்டம் போடப்படும் ஆலோசனைக் குழுவில், இவருக்கு இடமுண்டு!

நேரு பெருமானுக்கு வலமோ, இடமோ, இடம் கிடைக்கும்.

மாநிலத் தேவைகளைக் கணக்கெடுத்து, ஆதாரங்களைத் திரட்டி, அங்கு காட்டுவார்.

இனிய முகம் காட்டி எமது குறை தீரும் ஐயனே! என்று வேண்டுவார்.

இவ்விதமானவரைப் பாராட்டத்தானே வேண்டும்! மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்; ஆம்! ஆனல், துவக்கத்திலே கூறினேனே அந்தக் கதை வடிவக் கருத்து விளக்கத்தின்படி, இதனையும் கவனித்துப் பார்த்தால்? பாராட்ட முடிகிறதா, என்று கூறு தம்பி!

எதிர்க் கட்சிகளைத் தாக்கும் தீரர், எண்ணிக்கை பலத்தைக் காட்டும் வீரர், எமக்கன்றோ எல்லாம் தெரியும் என்று எக்காளமிடும் ஏந்தல், ஏற்றமிக்க குழுக்களில் இடம் பெற்றுள்ள மேலோன், எதுவேண்டும் இங்கு என்பதைக் கண்டறிந்த கற்றறிவாளன், நேரு பெருமகனரின் நண்பர் என்ற அளவுக்கு உயர்ந்தோர், வாதவல்லவர், புள்ளி விவரப்புலி, விமானமேறித் திங்களுக்குஇருமுறையேனும் தில்லி தரிசனம் செய்யும் பக்திமான்! ஆமாம்! அதிலே ஒன்றும் குறைவில்லை!

ஆனல், வீரதீரம், அறிவாற்றல், அஞ்சாநெஞ்சம், திறமை, எல்லாம் ததும்பி வழிகிறது—அவர் ஆட்சியில் உள்ள நாட்டுக்கு,

தமிழ்நாடு என்ற பெயரும் இல்லை.
மைல் கற்களிலேயும் இந்தித் தொல்லை.
சேது சமுத்திர திட்டம் வரப்போவதில்லை.
சேலத்து இரும்புத் தொழிலுக்கு, விமோசனம் இல்லை.
நெய்வேலி நிர்வாகம் இவரிடம் அல்ல.
அலுமினியம் தொழிலுக்கு அதிகாரி, இவரல்ல.
காகித ஆலை கட்டப்போவது, இவர் துரைத்தனம் அல்ல!

—என்று அடுக்கிக்கொண்டே போகலாம் (அவ) லட்சணத்தை.

இந்த நிலையில், நாடு; இதற்கு வந்து வாய்த்த அமைச்சர் வீரதீர மிக்கவர், அறிவாற்றல் நிரம்பியவர் என்று காட்டிப் பயன் என்ன? இந்த முழு உண்மை தெரியா முன்பு பாராட்டக்கூடத் தோன்றும்! முழு உண்மை தெரிந்த பிறகு? நாட்டுப்பாடல்தான், நினைவிற்கு வருகிறது,

முள்ளு முனையிலே
வெட்டியது மூணு குளம்!
இரண்டு குளம பாழ்
ஒன்றில் தண்ணியே இல்லை.

தம்பி! இந்த நிலையில் உள்ள துரைத்தனத்தையும், துரைத்தனத்தை இந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ள, அரசியல் ஏற்பாட்டையும், இன்னமும் சரிவர உணர்ந்துகொள்ளாத மக்கள், மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு, துவக்கத்தில் காட்டினேனே பார்க்கச் சொல்லி, அந்த வீரச் செயலில் ஈடுபட்டவனை, பாராட்டலாம் என்று எண்ணுவது போலாகி, பாராட்டியும் விடுகிறார்கள். முழு உண்மை தெரியவேண்டும்—எல்லோருக்கும். அதைத் தெரியப்படுத்தும் பணியில்தான், உன் அறிவாற்றல் அனைத்தும், இன்னும் குறைந்தது பத்து ஆண்டுகள் பயன்படவேண்டும். அதற்கான முறையிலேதான், உன் திறம் வளரவேண்டும் மிளிரவேண்டும். அந்த நம்பிக்கைதான், எனக்கும் உனக்கும் உள்ள ஒரே ஒரு கருவூலம்.

அண்ணன்,



காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.